மலர்-3 இதழ்-52 அக்டோபர் 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



# சோறூட்டல்




ஆண் குழந்தை பன்னிரெண்டாவது மாதத்திலும், பெண் குழந்தை எட்டாவது மாதத்திலும் பேசத் துவங்கும்.ஆகவே பெண் குழந்தைகளுக்கு எட்டாவது மாதத்திலும் ஆண் குழந்தைகளுக்கு பன்னிரண்டாவது மாதத்திலும் சோறு ஊட்டுதல் வேண்டும் போஜன சாஸ்திரம்...

# மகா வில்வம்

ஏழு ஜென்ம பாவம் விலக...
ஒரு வில்வம் போதும்!
சிவனாருக்கு உகந்தது வில்வம் சூரியோதயத்துக்கு முன்னதாகவே பறித்து வைத்துக் கொள்வது உத்தமம். வில்வத்துக்கு நிர்மால்யம் கிடையாது சிறிது தண்ணீரை வில்வத்தில் தெளித்துவிட்டு, பூஜைக்குப் பயன்படுத்தலாம். தினமும் சிவனாருக்கு வில்வம் சார்த்தி வழிபடுவது சிறப்பு.




# விபூதி மூன்றுகோடுகளின்மகிமை




விபூதியால் நெற்றியில் போடும் மூன்று கோடுகளுக்கும் மகிமை உள்ளது.

**முதல் கோடு:** அகாரம், கார்ஹபத்யம், ரிக்வேதம், பூலோகம், ரஜோகுணம், ஆத்மா, க்ரியாசக்தி, அதிகாலை மந்திரத்தின் தேவதை மஹாதேவன் ஆகியவை அடங்கியது.

**இரண்டாவது கோடு:** உகாரம், தக்ஷிணாக்னி, ஆகாயம், யஜுர்வேதம், சத்வகுணம், பகல்நேர மந்திர தேவதை இச்சாசக்தி, அந்தராத்மா, மகேஸ்வரன் ஆகியோர் இதில் உள்ளனர்.

**மூன்றாவது கோடு:** மகாரம், ஆஹவனீயம், பரமாத்மா, தமோகுணம், சுவர்க்கம், ஞானசக்தி, ஸாமவேதம், மாலைநேர மந்திர தேவதை, சிவன் ஆகியோர் இதில் உள்ளனர்.

# விரைவில் நல்லது நடக்கும் என்று நம்புங்கள்

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் இறைவனை அவசரப்பட்டு தவறாக எடைபோட்டுவிடுகிறோம். நம்மை காக்கவே இறைவன் ஒவ்வொருகணமும் காத்திருக்கிறான். அவன் தரும் சோதனைகள் அனைத்தும் நம்மை வேறொரு மிகப் பெரிய ஆபத்திலிருந்து காக்கவே என்று நாம் புரிந்து கொண்டால், எதைப் பற்றியும் அலட்டி கொள்ளவேண்டியதில்லை. சோதனை என்றால் இறைவனின் அருட்பார்வை உங்கள் மீது விழுந்துவிட்டது விரைவில் நல்லது நடக்கும் என்று நம்புங்கள்.

# பிரதோஷத்தின்போது ஸோம ஸூக்த பிரதக்ஷிணம் வந்தால் பிரச்சனை தீரும்




www.aanmeegamalar.com

பிரதோஷ காலத்தில் தேவர்கள் ஆலகால விஷத்திற்கு அஞ்சி, கைலாய மலையை இங்கும் அங்கும் ஓடி, இறைவனைச் சரணடைந்து நற்கதியைப் பெற்ற வழிமுறைதான் ஸோம ஸூக்த பிரதக்ஷிணம் என்று கூறப்படுகின்றது.

ஸோம ஸூக்த பிரதக்ஷிணம் எப்படி செய்வது:

சிவாலயத்தில் நந்தியம்பெருமானிடமிருந்து புறப்பட்டு, இடப்புறமாகச் சென்று சண்டிகேசுவரரை வணங்கி, அங்கிருந்து வந்த வழியே திரும்பி வந்து, நந்தியம்பெருமானை வணங்கி, வலப்புறமாகச் சென்று அபிஷேக தீர்த்தம் வழியும் கோமுகி வரை வந்து, மீண்டும் வந்த வழியே திரும்பி நந்தியம்பெருமானின் பின் நின்று மூலஸ்தானத்தில் சிவபெருமானை நோக்கி வணங்க வேண்டும். இப்படி மூன்று முறை வலம் செய்து வணங்கும் முறை தான் சோம சூக்த பிரதட்சணம் எனப்படும். இப்படி பிரதோஷ தினத்தில் சோம சூக்த பிரதட்சணம் செய்து வணங்கிட நன்மைகள் விளைகின்றன என்கிறார்கள் மெய்யன்பர்கள்.

பிரதோஷத்தின் சிறப்பையும் பயனையும் உரைக்கும் பாடல் ..!

பேரிடர் நீங்குமே பிணி யாதாயினுஞ்
சாம்பலாகுமே.
மறை போற்றும் தேவரிட்ட சாபமாயினும்
விமோசனம் காணும்.
விவாகமும் விமரிசையாய் நடந்தேறுமே:
புவியுறை,
சம்பத்தெல்லாம் சித்தம்போல் சித்திக்குமே
பூதலத்தே நின்ற
சிவனம்பலமெலாம் ஏகித் தொழுத பேறு
பெற ப்ருஹந்நாயகி யுறை
தக்ஷிணமேரு தன்னை கை தொழுதக் கால்
சிவனே தரிசனம் தருவான் பொய்யல்ல.

ஒவ்வொரு நாளும் மாலை 4.30–6.00 நேரம் நித்திய பிரதோஷம் எனவும், ஒவ்வொரு அமாவசைக்கு முன்னரும், பௌர்ணமிக்கு முன்னரும் வரும் திரயோதசி திதி பட்ச பிரதோஷம் எனவும், சனிக் கிழமையில், திரயோதசி சேர்ந்தால் அது சனி மஹா பிரதோஷம் எனவும், திங்கட் கிழமையில், திரயோதசி சேர்ந்தால் அது ஸோம பிரதோஷம் எனவும் போற்றப்பட்டு, சிறப்பான வகையில் வழிபாடு செய்யப்படும்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com








# நாகதோஷம், கணவன் மனைவி பிரச்சனை தீர்க்கும் திருத்தலம்

நாகதோஷம், குடும்ப பிரச்சனை, குழந்தை பாக்கியம் போன்ற பிரச்சனைகளை எளிதாக தீர்த்துவைக்கும் திருத்தலம்தான் அருள்மிகு பாலாம்பிகா சமேத கார்க்கோடேஸ்வரர் திருக்கோயில், இத்திருக்கோயில் அரியலூரில் உள்ளது.

இங்கு கிழக்குப் பார்த்த திருக்கோலத்தில் ஈசனும், தெற்குப் பார்த்த கோலத்தில் அன்னை பாலாம்பிகாவும் அருள்பாலிக்கின்றனர்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற பரிட்சித்து மகாராஜா, அங்கு தவத்தில் இருந்த முனிவரின் தவத்திற்கு இடையூறாக அருகில் இறந்து கிடந்த பாம்பை, முனிவரின் கழுத்தில் போட்டு அவமதிக்கிறார், இதை அறிந்த முனிவரின் மகன் ஏழு நாட்களில் பாம்பு தீண்டி சாகுமாறு பரிட்சித்து மகாராஜாவிற்கு சாபத்தை கொடுத்துவிடுகிறார்.

சாபம் பலித்து பரிட்சித்து மகாராஜா பாம்பு தீண்டி இறந்துவிடுகிறார், இதை அறிந்த பரிட்சித்து ராஜாவின் மகன் ஜனமேஜயன், அனைத்து பாம்புகளையும் கொன்று குவிக்கும் விதமாக சிறப்பு யாகம் ஒன்றை நடத்தத் துவங்கும்போது, அனைத்து பாம்புகளும் யாக குண்டத்தில் விழுந்து சாகும்போது, நாகங்களின் அரசரான கார்க்கோடகன், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தவம் இருந்தபோது ஈசன் கார்கோட நாகத்திற்கு காட்சியளித்து,

நீ சார்ந்த இனத்துக்கு இனி எந்த ஒரு ஆபத்தும் இருக்காது, தவிர இந்தத் திருத்தலத்தில் வசிக்கும் எவரையும் கால சர்ப்ப தோஷம் அணுகாது. அத்தகைய தோஷம் இருந்தால், அவர்கள் நலம் பெறுவர் என்று கார்க்கோடகனுக்கு அருளினார் சவுந்தரேஸ்வரர். இந்த நிகழ்வுக்குப் பிறகு சவுந்தரேஸ்வரர் கார்க்கோடேஸ்வரர் எனவும் அழைக்கப்படலானார். ஈசன் தந்த வாக்குப்படி அன்று முதல் இன்றுவரை காமரசவல்லி (கிராமத்தில்) பாம்பு தீண்டி எவரும் பலியானதில்லை. இதை இங்குள்ள கல்வெட்டே உணர்த்துகிறது. இந்த வரத்தை ஈசனிடம் இருந்து கார்க்கோடகன் பெற்றது கடக ராசி, கடக லக்னம் அமைந்த தினத்தில், எனவே இந்த ராசி மற்றும் லக்ன அன்பர்கள் இங்கு வந்து தரிசிப்பது சிறப்பு.

மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

Cell: 08825844033

aanmeegamalar@gmail.com






மற்றொரு புராணக் கதையின்படி...

உலகில் காமம் பெருகி, மக்கள் தவறான வழியில் நடக்கும் விதமாக, மக்களின் வாழ்க்கை மாறிய கால கட்டத்தில், தேவர்களும் முனிவர்களும், காமன் ரதியை வைத்து சிவனின் தவத்தை கலைக்க முற்பட்டபோது, சிவனின் நெற்றிக்கண்ணால் எரிந்த காமனுக்கு மீண்டும் உயிர் பிச்சை அளிக்க வேண்டி ரதி தேவி மிகவும் சிரத்தையுடன் கடினமாக தவம் புரிந்த இடம்தான் இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம்.

ரதிதேவியின் செப்புத் திருமேனி ஒன்று இந்த ஆலயத்தில் உள்ளது. தன் கணவனை உயிர்ப்பிக்க வேண்டி, இறைவனிடம் இரு கரங்களை ஏந்தி, மாங்கல்ய பிச்சை கேட்கும் கோலத்தில் காணப்படுகிறது இந்தத் திருமேனி. காமரசவல்லியில் ஒவ்வொரு மாசி மாதமும் பவுர்ணமி தினத்தன்று காமன் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த விழாவின்போது இரண்டாக வெட்டிய ஆமணக்குச் செடியை ஆலயத்தில் நட்டு வைப்பார்கள். இறை பக்திக்கு உட்பட்டும், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டும் இந்தக் கிளை எட்டே நாட்களுக்குள் மீண்டும் உயிர் பெற்று வளர்கிறது. ரதிதேவியின் வாழ்க்கை இங்கே துளிர்த்ததுபோல், இங்கே நடப்படுகிறவை மீண்டும் துளிர்க்கும் என்பதற்கு உதாரணம் இது.

சவுந்தரேஸ்வரர் பாலாம்பிகா என்ற திருநாமத்துடன் திகழ்ந்த சுவாமி அம்பாள், கார்க்கோடேஸ்வரர் காமரசவல்லி என்று பெயர் மருவி இன்றுவரை அழைக்கப்பட்டுவருகிறார்.

புராணங்கள் ஒரு பக்கம் இந்தக் கதைகளைச் சொன்னாலும், ஆலயத்தில் அமைந்த சுமார் 45 கல்வெட்டுக்களும் காமரசவல்லி ஆலயத்தின் புராதனத்தை எடுத்துச் சொல்கின்றன.

காமரசவல்லிக்கு திருநல்லூர், கார்க் கோடீஸ்வரம், சதுர்வேதிமங்கலம், ரதிவரபுரம், காமரதிவல்லி என்று பல பெயர்கள் உண்டு. இங்குள்ள கார்க்கோடேஸ்வரர் திருக்கோயில், சுந்தர சோழன் என்கிற ராஜகேசரிவர்மனால் கி.பி962 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகக் கல்வெட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜசோழனின் தாத்தாவே இந்த ராஜகேசரிவர்மன் ஆவான். கி.பி. 1260 ஆம் ஆண்டில் போசள மன்னன் வீர ராமநாதன் என்பவனின் தளபதி ஸ்ரீரங்க தண்டநாயக்கரால் இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டது.

சோழர்கள் தவிர பாண்டியர்கள், போசளர்கள் போன்ற மன்னர்கள் வழி வழியாக இந்த ஆலய வழிபாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

சுந்தர சோழன், உத்தம சோழன், முதலாம் ராஜராஜன் முதலாம் ராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன், கடாவர்மன் போன்ற மன்னர்கள் தங்கள் காலத்தில் காமரசவல்லி திருக்கோயிலை நிர்வாகித்து வந்ததாகக் கல்வெட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு வருடமும் இந்த ஆலயத்தில் நடந்த வேத பாராயண போட்டி பற்றியும், மார்கழி மாதத்தில் நடக்கும் திருவாதிரை விழா பற்றியும், அந்த விழாவில் நடைபெறும் சாக்கக் கூத்து என்கிற கூத்து பற்றியும் கல்வெட்டுகளில் தகவல் இடம் பெற்றுள்ளது. இந்த ஊரில் நடந்த ஒரு நிலத் தகராறு பற்றிய வழக்கை விசாரிக்க கி.பி. 1240ல் போசள மன்னன் வீரசோமேஸ்வரன் காமரசவல்லிக்கு வந்து தீர்ப்பு வழங்கிய விவரத்தையும் ஒரு கல்வெட்டு சொல்கிறது.

ஆலய வழிபாடுகளுக்கு மாலைகள் கட்டுவதற்கு நந்தவனம் அமைத்த பகுதி பிச்சதேவன் நந்தவனம் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. இந்த நந்தவனத்தைப் பராமரித்து வந்தவர்கள் வசிப்பதென ஒரு பகுதி இருந்துள்ளது. அது திருத்தொண்டன் தொகையன் வளாகம் என வழக்கப்பட்டுள்ளது. காமரசவல்லியில் திருஞானசம்பந்தர் திருமடமும் இருந்து வந்துள்ளது.

சாபம், நாகதோஷம், குடும்ப பிரச்சனை, குடும்பத்தில் குழப்பம், கணவன் மனைவி பிரச்சனை உள்ளவர்கள் இத்திருத்தலத்திற்கு வந்துஇறைவனிடமும் தாயாரிடமும் வேண்டுதலை வைத்தால் விரைவில் பிரச்சனை தீர்ந்துவிடுகிறது.

காஞ்சி மகா பெரியவா 1950 ஆம் ஆண்டில் இந்த ஆலயத்துக்கு வந்து தன் கையாலேயே ஸ்ரீகார்க்கோடேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டுச் சென்றிருக்கிறார் என்பது கூடுதல் சிறப்பு.

சிறப்பம்சங்கள்:

கடக ராசிக்காரர்கள் வணங்க ஏற்ற தலம் இது. சர்ப்பதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து வழிபடுவது சிறப்பு. கடக ராசி, கடக லக்னக்காரர்கள் சவுந்தரேஸ்வரர் என்கிற கார்க்கோடஸ்வரரை வழிபடுவது விசேஷம். தவிர திருமணப் பேறு வேண்டுவோர், குழந்தைப் பேறு வேண்டுவோர், இல்லறம் செழிக்க விரும்புவோர், நாக தோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உகந்த தலம் இது.




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# சிவன் சொத்து குலநாசம்

## கோவிலை காக்க குழந்தைதனமாகவும் வேண்டலாம்

உலகில் உயிரோட்டமுள்ள ஒரே மதம் இந்து மதம், நம் மதத்தின் சின்னமாக விளங்கும் திருக்கோயில்களில் தற்போது பல்வேறு தில்லுமுல்லு வேலைகள் நடைபெற்று வருகிறது.

கலியுகம் நடைபெறும் இந்த சமயத்தில் இதுபோன்ற ஈனச் செயல்கள் பெருகும் என்பது நியதி.

அதாவது, கணிப்பொறி வேலை தெரியாத ஒரு நபரை கணிப்பொறியில் அமர வைத்து வேலை வாங்க முடியுமா? அதுபோலத்தான் திருக்கோயில்களின் அருமைகளை அறியாத ஈனர்களை, பணப் பேய்களை திருக்கோயிலில் பணியில் அமர்த்தினால் அவர்களின் புத்தி பணத்தை நாடித்தான் செல்லும்.

சேவை, கருணை என்பதை அறியாத ஒரு சிலர் பணத்திற்காக திருக்கோயில்களையே கொள்ளையடித்து வருகின்றனர்.

அதே சமயம், திருக்கோயிலில் பணிபுரியும் ஒருசிலர் மிகுந்த ஈடுபாட்டுடன் தங்கள் கையில் உள்ள பணத்தையே செலவு செய்து கோவிலைப் பராமரிக்கவும் செய்கின்றனர். இதுபோன்றவர்களால்தான் பல கோயில்கள் இன்றும் அதித சக்தி வாய்ந்ததாக திகழ்கிறது.

ஆனால் சில கயவர்களால் சுவாமியின் சொத்துக்களை மட்டுமின்றி சுவாமி சிலைகளையே திருடுகின்றனர்.

சிவன் சொத்து குல நாசம் என்று நமது ஆன்றோர் முன்பே வரையறுத்துள்ளது, அந்தப் வாக்கு இக்காலக்கட்டத்திற்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

இதுபோன்ற ஈனச் செயல்களில் ஈடுபடுபவர்களின் குடும்பம் தலைமுறை தலைமுறையாக கெட்டுச் சீரழியும், தற்போது இதில் ஒரு படி மேலே போய் பணம் கொடுத்து மாற்று மதத்தினரும் இந்து ஆலயங்களில் புகுந்துவிட்டனர். இப்படிப்பட்டவர்கள் இந்து மதத்திற்கு எப்படி விசுவாசமாக இருப்பார்கள். இவர்கள் திருக்கோயில் பணியில் சேர காரணமான கயவன்களின் குடும்பம் சிதறும் சீரழியும். சிவன் சொத்து குல நாசம் என்ற ஆன்றோர் வாக்கு இதுபோன்ற செயல்களுக்கும் பொருந்தும்.

**உண்மையான பக்தர்கள் நினைத்தால், கோயில் கொள்ளையர்களின் கண் முன்னாலேயே அவர்களின் வாழ்நாளிலேயே அவர்களின் குடும்பம் சின்னாபின்னமாக்க முடியும்.**

ஆனால் இதைப்பற்றி கவலைக் கொள்ளாமல், பணம் சம்பாதிக்கும் ஒரு நிறுவனமாகவே திருக்கோயில்களை மாற்றி வைத்துள்ளனர் ஒருசில நபர்கள்.

இவர்களை நாம் நேரடியாக தண்டிக்க முடியுமா?

இதுபோன்ற திருடர்களுக்கு மேல்மட்டம் முதல் அடிமட்டம் வரை செல்வாக்கு இருப்பதால் இவர்களை சாதாரண பக்தர்கள் எதிர்கொள்வது கடினம்.

ஆனால் உண்மையான பக்தர்கள் நினைத் தால், கோயில் கொள்ளையர்களின் கண் முன்னா லேயே அவர்களின் வாழ்நாளிலேயே அவர்களின் குடும்பம் சின்னாபின்னமாக்க முடியும்.

ஒவ்வொரு பக்தர்களும் தங்கள் நலனும், தங்கள் குடும்ப நலத்திற்கு மட்டுமே இறைவனிடம் வேண்டிக்கொள்கின்றனர். இதனால் பக்தர்களின் வேண்டுதல்களை மட்டுமே இறைவன் நிறைவேற்றி வருகிறார்.

ஒருமுறை கடவுள் நலனுக்காக, இறைவனிடம் பக்தர்களாகிய நாம் வேண்டிக் கொள்வோமே...

அந்த வேண்டுதல் சாதாரண வேண்டுதலாக இல்லாமல், "கோயில் கொள்ளையர்கள் வாழ்நாள் முழுவதும் சித்திரவதை அடைந்து வருந்தவேண்டும்" என்று இறைவனை வேண்டி, ஒரு துண்டு சீட்டில் எழுதி "கோயில் உண்டியல்களில் போடுவோம்" இது ஒரு கூட்டுப்பிரார்த்தனைக்கு சமமாக மாறும்போது கண்டிப்பாக இறைசக்தி இந்த வேண்டுதலை நிறைவேற்றும்.

தவறு செய்பவர்கள் கண்டிப்பாக தண்டனை அனுபவித்தே தீர வேண்டும், அதுவும் பல கோடி மக்களின் நம்பிக்கையாக திகழும் திருக்கோயில்களிலே கொள்ளையடிப்பவர்கள் கொடுரமாக தண்டனை பெறவேண்டும்.

பலரின் மனநிலை ஒரே மாதிரியாக இருந்தால் அந்த மனநிலையின் அதிர்வு அலை களால் அந்த கோரிக்கை நிறைவேறும். இதைத்தான் கூட்டுப்பிரார்த்தனையாக நமது முன்னோர் வகுத்துவைத்தனர்.

பெற்றவர்களிடம் குழந்தை வைக்கும் கோரிக்கையைப் போன்று, கோவிலைக் காக்க இறைவனிடம் நாமும் குழந்தைத்தனமாக மேற்கண்ட கோரிக்கையை வைப்போம்.

உண்மையான கடவுள் நம்பிக்கை உள்ள அன்பர்கள் இந்த வேண்டுதலை இறை நம்பிக்கையுடன் செய்தால் கோயில்களை இறை சக்தியே பாதுகாக்கும். கொள்ளை கும்பல் தலைதெரிக்க ஓடும்.




ஆன்மிகமலர் மெயில் புக்

# நந்தியின் குறுக்கே செல்லக் கூடாது என சொல்லுவது ஏன்?

சைவ சமயத்தில் முதல் குருவாகவும், சிவனின் வாகனமாகவும் கருதப்படுபவர் திருநந்தி தேவர் ஆவார். ஆலயங்களில் சிவலிங்கத்தின் முன் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதாக, நந்தி தேவரின் உருவம் அமைக்கப்பட்டிருக்கும். நந்தியின் நிறம் வெள்ளை. வெண்மை தூய் மையைக் குறிப்பதாகும். அறமாகிய தர்மத்தின் நிறமும் வெண்மையே. நந்தி என்ற சொல்லுக்கு எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர் என்று பொருள். இளமையும், திட்பமும் வாய்ந்தவராக நந்தி தேவர் கருதப் படுகின்றார்.



**நந்தி வாகனமான கதை:** சிவாலயங்களில் கர்ப்பக்கிரகத்திற்கு எதிரில் கம்பீரமாக அமர்ந் திருக்கும் நந்தி தேவர் தருமவிடை எனப்படுவார். அழிவே இல்லாதது தர்மம். அது ரிஷபம் வடிவில் இறைவனிடத்தில் சென்றடைய, அந்த நந்தியின் மீது சிவபெருமானிடம் தன்னை வாகனமாக ஏற்கும்படி கூறியது.

அவ்வேண்டுகோளுக்கு இணங்க சிவபெரு மான், ஒவ்வொரு யுகத்திலும் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதங்களால் நீ நடக்க வேண்டும். நானே உனக்கு உயிராய் இருந்து உன்னை நடத்துவதால் நம்மை வணங்குவோர் செய்யும் பாவங்கள் கூட அறமாக மாறும் என்று வரமருளினார் சிவபெருமான்.

சிவாலயங்களில் உள்ள நந்தி தேவர் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை மட் டும் நிமிர்த்தியுள்ளதை நாம் காண முடியும். கலியுகத் தில் ஒரு காலால் நடக்க வேண்டும் என்ற சிவ பெருமானின் ஆணைக் கேற்பவே அவ்வாறு உள்ளது.

**நந்தியின் குறுக்கே செல்லக்கூடாது ஏன்?**

சிவன் கோவில் வாசலில் கொடி மரத்தை அடுத்து நந்தி மண்டபம் காணப்படும். பிரதோஷ காலத்தில் இவருக்கே முக்கியத்துவம் தருவர். நந்தியின் குறுக்கே செல்லக்கூடாது எனவும் தடை விதிப்பர்.

இதற்கு காரணம் உண்டு. இது சிவனின் வாகனம். வாகனம் எதுவாயினும் அது ஜீவா ஆத்மாவைக் குறிக்கும். ஜீவாத்மா கருவறையிலுள்ள பரமாத்மாவைப் பார்த்த வண்ணம் உள்ளது. ஜீவாத்மாவின் குறிக்கோள் இறைவனை சென்றடைய வேண்டும் என்பது தான். அந்த கோட்பாட்டை விளக்கும் பொருளாக நந்தி தேவர் சிவனை நோக்கி இருக்கிறார்.

ஆகவே, பக்தர்கள் நந்தியின் குறுக்கே செல்லக்கூடாது என்றும் இது கடவுளை அடைய நினைப்பவர்களை தடுக்கும் செயலுக்கு ஒப்பாகும் என்று சொல் வார்கள். மேலும், நந்தீஸ்வரரை வணங்கி அவரது அனுமதி பெற்றே நாம் கோவிலுக்குள் நுழைய வேண்டும்.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com



# அது என்ன Password



நம்பிக்கையுடன் நகர்ந்துகொண்டே இரு. நதி போல, ஒரு இடத்தில் வெற்றி காத்திருக்கும் கடலாக, அனுமனைப் போல் வாழ்வோம்.

விவேகானந்தர் அனுமனைப் பின்பற்றி மக்கள் வாழ வேண்டும் என அறிவுறுத்துகிறார். "மகாவீர அனுமனை உன் வாழ்வின் லட்சியமாகக் கொள். அவர் ராமபிரானின் உத்தரவுப்படி கடலையும் தாண்டிச் சென்றார்.

அவருக்கு வாழ்வையும், சாவையும் பற்றிய கவலை சிறிதும் இல்லை. அவர் தன் புலன்களை முற்றிலும் அடக்கி ஆட்சி செய்தார். அற்புதமான புத்தி சாதுர்யம் கொண்டவர். ஒருபக்கம் அவர் தொண்டு என்னும் லட்சியத்தின் உருவகமாகத் திகழ்கிறார்.

இன்னொரு பக்கம் சிங்கம் போன்று தைரியத்துடன் உலகையே பிரமிக்க வைக்கிறார். ராமனின் நன்மைக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வதிலும் அவர் சிறிதும் தயக்கம் காட்டவில்லை. ராமசேவையைத் தவிர மற்ற அனைத்தையும் அறவே புறக்கணித்தார்.

பிரம்மலோக பதவியையோ, சிவலோகப் பதவியையோ கூட அவர் பெரிதாக கருதாமல் வேண்டாம் என்று ஒதுக்கினார். அவருடைய வாழ்க்கையின் ஒரே லட்சியம் ராமனுக்கு நன்மை செய்வது மட்டுமே.

முழுமனதோடு அர்ப்பணிப்பு உணர்வுடன் பிற ருக்கு செய்யும் சேவையே அனுமனிடம் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடம்."

கனவில் வந்த கடவுளிடம் பக்தன் கோப மாய்க் கேட்டான், "நீ எல்லா இடத்திலும் நிறைந் திருப்பது உண்மையானால், ஏன் என்னுடைய பிரார்த்தனைகள் உன் செவிகளுக்கு எட்ட வில்லை?"

கடவுள் சிரித்தபடியே, "நானும் ஒரு வகையில் Wifi சிக்னல் போலத் தான் எங்கும் பரவி இருக்கிறேன்.*

ஆனால், என்னை நீ உன்னுள் பெற்றுக் கொள்ள உனக்கு Password தெரிய வேண்டும்!" என்றார்!

பக்தன் "அது என்ன Password ?" என்று ஆர்வமாகக் கேட்க...

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகி றாய். நீ உன்னைபலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய்.

நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத் தால் வலிமைபடைத்தவனாவே ஆகிவிடுவாய். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

நீ தன்னம்பிக்கையுடன் விடாமுயற்சி செய்து கடினமாகஉழைத்தால், வெற்றி பெறுவாய். ஆழ்ந்த நம்பிக்கையுடன் இரு எனச் சொல்லி மறைந்தார் கடவுள் !

மு.கிருஷ்ண மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399

www.aanmeegamalar.com

# பலநோய்களைத் தீர்க்கும் கைவிரல் வைத்தியங்கள்




www.aanmeegamalar.com

உடலின் எந்த ஒரு பாகத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும், கைவிரல்களுக்கு பயிற்சி அளித்தே சரி செய்யலாம் .

## கட்டை விரல்

உங்கள் கட்டை விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வதால், மன அழுத்தம் குறைய, மனநிலையை கட்டுப்படுத்த முடியும், நல்ல உறக்கம் பெறலாம். மேலும் இது உடற்சக்தியை மேம்படுத்தவும் உதவுகிறது. கட்டை விரலானது, மண்ணீரல் மற்றும் வயிறு பகுதியுடன் இணைப்புள்ளது ஆகும். இது வெள்ளை மற்றும் சிவப்பு இரத்த செல்களை ஊக்குவித்து செரிமானத்தை சீராக்குகிறது.

## ஆள்காட்டி விரல்

உங்கள் பலவீனம் மற்றும் பயத்தை குறைக்க கூடியது ஆள்காட்டி விரல். மேலும், ஆள்காட்டி விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது உங்களிடம் இருக்கும் அடிமைத்தனத்தினை குறைக்கவல்லது. உங்கள் ஆள்காட்டி விரல் சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பையுடன் இணைப்புக் கொண்டுள்ளது. சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகாமல் இருக்கவும், நீர்வறட்சி ஏற்படாமல் இருக்கவும் பயனளிக்கிறது.

## நடுவிரல்

நடுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது உங்களது கோபத்தை குறைக்க உதவும். தலை பகுதியில் இரத்த ஓட்டத்தை சீராக்கி தலைவலி ஏற்படாமல் இருக்கவும் இது உதவுகிறது. நடுவிரலானது, கல்லீரல் மற்றும் பித்தப்பையுடன் இணைப்புடையது. இது இந்த பாகங்களின் வலிமையை மேம்படுத்துகிறது மற்றும் உடற்சக்தியை ஊக்குவிக்கிறது.

## மோதிரவிரல்

ஏறத்தாழ கட்டைவிரலுடன் ஒத்துப் போவது தான் இந்த மோதிர விரலும். உங்களில் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் தீய எண்ணத்தை குறைக்க நீங்கள் மோதிர விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்யலாம்.

மேலும், மோதிர விரல் நுரையீரலுடன் இணைப்பு கொண்டுள்ளது. இது சுவாசக் கோளாறுகளை போக்கவல்லது. மேலும், நரம்பு மண்டலம், தசைகளுக்கு வலிமை அளிக்கிறது. இதனால், உங்கள் உடற்சக்தி மேம்படும்.

## சிறுவிரல்

சிறுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது இதயம் மற்றும் இரத்த ஓட்டத்திற்கு நல்லது. இது இரத்த ஓட்டத்தை சீராக்கி இதர உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கிறது. மேலும் இது மூளையின் செயல்திறனையும் மேம்படுத்துகிறது, இதனால் உங்கள் எண்ணம், சிந்தனை, கவனம் போன்றவையும் மேம்படும்.

## உள்ளங்கை

மன அழுத்தம் தான் அனைவருக்கும் ஏற்படும் கொடிய நோய். இது ஒட்டுமொத்தமாக மனதையும், உடலையும் பாதிக்கக் கூடியது. உள்ளங்கையில் அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்க உதவுகிறது.


விரைவில்...
aanmeegamalar.com
இணையதள செய்திகள்
இ-புக் போன்றவற்றை
செல்போனிலேயே
பார்க்க
தயாராகிறது
mobile app:
Google play
Dal web ai dispositivi Android

# முக அழகை அதிகரிக்கும் பிராணாயாமம்

ஒருசிலரை பார்க்கும்போது சற்று அழகு இல்லாதவர் போல இருப்பார்கள் ஆனால் அவர்களிடம் அனைவரும் நட்புடன் பழகுவர், அதே சமயம் சற்று அழகானவராக ஒரு சிலர் இருப்பார்கள் ஆனால் அவர்களிடம் நெருங்க சிலர் தயக்கம் காட்டுவர். இதற்கு என்ன காரணம் என்று நாம் பலமுறை சிந்தித்திருப்போம்.

அழகு, கவர்ச்சி, வசீகரம் என்பது நாம் பார்க்கும் பார்வையில் அல்ல. இது முழுக்க முழுக்க பிராண சக்தியை அடிப்படையாக கொண்டது என்பது தான் உண்மை.

அனைத்து ஜீவராசிகளும் பிராண சக்தியை கொண்ட ஜீவர்கள் தான். ஆனால் ஒரு சிலவற்றிற்கு பிராண சக்தி குறைவாகவும் ஒரு சிலவற்றிற்கு பிராண சக்தி அதிகமாகவும் இயற்கையிலேயே அமைந்த ஒன்று.

எது எப்படி இருந்தாலும் பிராண சக்தி நிறைந்த உயிரினங்கள் அனைத்தையும் அனைத்து உயிரினங்களும் விரும்பும், அவற்றுடன் நட்பு கொள்ள ஏங்கும் இது தான் உண்மை. அது உலக அழகியானாலும் சரி உள்ளூர் கிழவி ஆனாலும் சரி பொருந்தும். மயிலாக இருந்தாலும் குயிலாக இருந்தாலும் பொருந்தும். முயல் ஆனாலும் பன்றி அனாலும் பொருந்தும்.

ஒருசில வளர்ந்த உயிரினங்களை அவ்வளவாக யாருக்கும் பிடிப்பது இல்லை. அவை என்னதான் நாகரீகமாக இருந்தாலும் அதை பெரும்பாலும் வெறுப்பாகவே பார்ப்பார்கள்.

ஆனால் அதே உயிரினம் பிறந்த சில மாதங்கள் வரை, சில வருடங்கள் வரை அநாகரீகமாக நடந்து கொள்ளும் அசிங்கமான உயிரினங்களாக இருந்தாலும் அதை ஆவலுடன், ஆசையுடன் பார்க்கவும் தோனும். இதற்கு காரணம் அந்த குட்டியின் பிராண சக்திதான். அந்தக் குட்டியின் பிராண சக்தி அனைவரையும் ஈர்க்கும்.

பிறந்த குட்டிக்கு பிராண சக்தி அதிகமாக இருப்பது தான். அவைகளே வளர்ந்த பின் அனைவராலும் வெறுக்க படுவதற்கு காரணம் அவைகள் வளர்ந்த உடன் அதிகமாக சிந்திக்க துவங்கி விடுவது தான்.

இது மனிதர்களுக்கும் பொருந்தும், பிறந்த குழந்தையாக இருக்கும்போதும், சற்று வளர் இளம் பருவம் வரை குழந்தைகள் ரசிப்பதற்கு உகந்தவர்களாக இருப்பார்கள், ஆனால் சற்று வயது முதிர்வு ஏற்பட ஏற்பட அவர்களை வெறுக்கவும் வைக்கு. அதற்கான காரணம்.

வளரும்போது ஆசைகள், கோபம், குரோதம், வஞ்சம், பதட்டம் போன்றவை உருவாக காரணமாகி பின் பிராண சக்தியை பாதிக்கும் மேல் குறைத்து விடுகிறது. அதனால் தான் அசிங்கமாகவும் அவலட்சணமாகவும் நோய் நொடிகள் கண்டு துன்புற வேண்டி உள்ளது.

பிராண சக்தி நிறைந்தவர்கள் ஆரோக்கியமானவர்கள், சுரு சுருப்புள்ளவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள், மற்றவர்களை கவரும் தன்மையை உடையவர்கள். மற்றவர்களால் அழகானவராக பார்க்கப்படுவார்.

இதையெல்லாம் புரிந்து கொள்ளாத நம் மக்கள் அழகு நிலையம், கண்ட கண்ட க்ரீம்களை தடவி முகத்தை கெடுப்பது, ஹேர் டை அடிப்பது அலங்காரம் என்ற பெயரில் தம்மை கெடுத்து கொள்கின்றனர்.

நீங்கள் எவ்வளவு அசிங்கமாக இருந்தாலும், கருப்பாக இருந்தாலும் மூச்சு பயிற்சி செய்யுங்கள் நீங்களும் அழகாகலாம் அனைவராலும் விரும்பபடுவீர்கள் இது நிச்சயம் அதை விடுத்து நான் கருப்பு, நான் அசிங்கமானவன், அசிங்கமானவள் என்று உங்களை நீங்களே தாழ்த்தி கொள்ள வேண்டாம்.

ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் அனைவரும் முடிந்தவரை பிராணாயாமம் செய்யுங்கள், இந்தப் பிராணாயமத்தின் அற்புத சக்தி உங்களை மிகுந்த அழகாக மாற்றும்.

– திருச்சிற்றம்பலம்




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# இறைவன் ஒருமுனைப்படுத்தப்பட்ட பக்திக்கு மதிப்பளிக்கிறான்

குருதேவர் அருளுகிறார்: "ஒவ்வொருவரும் துறவியாகி விட்டால் உலகம் என்னவாகும்? என்று சிலர் வாதிடுவர். நீங்கள் இறைவனைத் தேடுகின்ற காரணத்தால், உலகம் முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை. இது தவறான வாதம். பொய்யான பகுத்தறிவு விளக்கம். உலகத்தை நிலையாக வைத்துக் கொண்டிருப்பதில் விடாப்பிடியாக இருக்கும் பலர் எப்போதும் இருப்பார்கள். அதைப்பற்றிக்கவலை வேண்டாம்! இருந்தும் இந்த உலகம் துன்பம், வெறுப்பு பொறாமை ஆகியவற்றால் மிகவும் நிறைந்திருக்கின்றது. இது மூடப்பட்டு புதிதாகத் தொடங்கப்படுவது ஒன்றும் நல்ல விஷயம் இல்லை என்று சொல்ல முடியாது! உங்கள் வாழ்க்கை முழுவதையும் உலக வழிகளிலும் உலக விஷயங்களின் மீதும் சேமித்திருப்பது உண்மையில் ஒரு தரம்தாழ்ந்த முதலீடு.



இறைவனை மட்டுமே காண விரும்புபவர்கள் அவனை மட்டுமே, முழுமையான துறவு மார்க்கத்தை ஆனந்தமாக அரவணைத்துக்கொள்கிறார்கள். துறவியின் கோட்பாடுகளுக்கு ஏற்ப வாழ்பவர்களுக்கு இறைவன் தன்னை வெளிப்படுத்துவான். "இறைவன் எனது வாழ்க்கை; இறைவன் எனது அன்பு: இறைவன் இடைவிடாத வழிபாட்டுக்கு எனது இதயத்தை அழைக்கின்ற ஆலயம், இறைவன் எனது பேரிலக்கு, இறைவனிடமிருந்து இரவலாகப் பெற்ற சக்தி இல்லாமல் ஒரு கடமையும் நிறைவேற்ற முடியாது. எனவே எனது தலையாய கடமை அவனைக் காண்பதே," ஒருவர் பக்தி மற்றும் மன உறுதி ஆகிய மனோபாவம் இல்லாமல், இறைவனை அறிய முடியாது. பகவத் கீதையில் இறைவன் கூறுகின்றான்:" எல்லா தர்மங்களையும் (கடமைகள்) புறக்கணித்து, என்னை மட்டுமே நினைவில் வை; நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் (சிறிய கடமைகளை நிறைவேற்றாமையினால் சேருகிறவற்றிலிருந்து) விடுவிப்பேன். (பகவத் கீதை அத்.18 ஸ்லோகம் 66)

மேலும் குருதேவர் அருளுகிறார்; "ஒரு துறவிக்கு வேண்டிய வெளிப்புறத் துறவு (அத்துடன் உட்புறத் துறவும் கூட) எல்லோருக்கும் சாத்தியமில்லை. ஆனால் எனது குழந்தைப் பருவத்தில் இறைவன் அல்லது எவருக்கும் அல்லது எந்த விஷயத்திற்கும் எனது விசுவாசத்தைக் கொடுக்க மாட்டேன் என உறுதி பூண்டேன். அவ்வாறு ஒருபோதும் கொடுக்கவுமில்லை. எனது இதயத்தில் அவனுக்காக மட்டுமே வாழ்கிறேன். எனக்கும் எனது இறைவனுக்கும் இடையில் எதுவும் வர நான் விரும்புவதில்லை. அந்த கோட்பாடுடன் கூடிய துறவு மிக அழகானது. மேலும் இறைவனுக்காக இந்த வழியில் துறப்பது மிக விவேகமானது, காரணம் இறைவன் இந்த ஒரு முனைப்பட்ட பக்திக்கு மதிப்பளிக்கின்றான்."

"துறவு என்பது முக்கியமாக திருமணத்தை, துணையைத் துறப்பது என்று மக்களால் கருதப்படுகின்றது. ஸ்வாமி சங்கரரும் மற்ற மதங்களின் மகான்களும் அதுபோன்ற துறவிகள் அத்துடன் கௌதம புத்தர் இருந்தார். அவருக்கு மணமாகி மனைவியும் குழந்தையும் இருந்தனர். ஆனால் அவர்களைத் துறந்து இறைவனைத் தேட காட்டுக்குச் சென்றுவிட்டார். அவருடைய சோதனை மிகமிகக் கடினமானது. இந்தியாவில் ஒரு சிறந்த மகான் அவரை நாடியவர்களிடம் அவர்கள் திருமணம் புரிந்தவர்களா என்று கேட்பது வழக்கம். அவர்கள் 'இல்லை' என்று சொன்னால், "நீங்கள் இன்னும் பாதுகாப்பாகத்தான் இருக்கிறீர்கள்!" என்று அவர் பதிலளிப்பார். திருமணம் புரிந்த பலர் அதையே கூறுவார்கள் என்பது எனக்குத் தெரியும்! திருமணம் செய்யாதவர்கள் சில நேரம் அதுபற்றி வருத்தப்படுகின்றனர். ஒருவருக்கு மணமாகாமலிருந்து, திருமணத்திற்கு வலுவான ஆசையில்லை என்றால், பிறகு அவர் மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை முதலில் தேடவேண்டும்.

**44 பாகம்**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

இறைவனைத் தேடும் முக்கியத்துவத்தைப் பற்றி நீங்கள் விழித்துக்கொண்ட உடனே, இடமோ அல்லது வலமோ பார்க்கவேண்டாம். மாறாக உங்கள் பேரிலக்கின்மீது மட்டும் உங்கள் மனதை வைக்கவும். இறைவனுக்கான ஆசை எழுதப்பட்டவுடன் அதை வளர்த்துக் கொள்ளுங்கள். மனப்பூர்வமாக அவனைத் தேடுங்கள். அவனை முதலில் தேடுங்கள். அதன்பின் அவன் திருமணத்திற்கு வழி காட்டுகின்றான் என்றால், அந்த வழியை பின்பற்றுங்கள். நீங்கள் இறைவனுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும்போது, அவன் உங்களிடம் என்ன எதிர்பார்க்கின்றான் என்று உங்களுக்குத் தெரியவரும். அதுதான் உங்கள் வாழ்க்கையை வழி நடத்த மிகப் பாதுகாப்பான வழி".

இறைவன்தான் முதன்மையானவன். அது தான் உண்மை. அதை நிரூபிக்கும்படியான வகையில் சில விஷயங்கள், குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரால் எழுதப்பட்ட 'ஒரு யோகியின் சுயசரிதம்' அத்தியாயம் 7ல் உள்ளன. அவையாவன நாகேந்திர நாத்பாதுரி; இவர் அந்தரத்தில் மிதக்கும் மகான். இவரை 'பாதுரி மகாசயர்' என்றும் கூறுவர். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் நண்பனான உபேந்திர மோகன் சௌத்ரி குருதேவரிடம் கூறுகிறார்." அவர் பல அருஞ்செயல்கள் புரிவதை நான் கண்டிருக்கிறேன். பதஞ்சலி முனிவரால் வகுக்கப்பட்ட புராதன எட்டு அங்கங்களுடன் கூடிய யோகமுறையில் குறிப்பிட்டுள்ள பல பிராணாயாமங்களில் (மூச்சை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பிராணசக்தியை கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வழிமுறைகள்) அவர் மிகவும் தேர்ச்சிபெற்றவர். ஒரு முறை பாதுரி மகாசயர் 'பஸ்திரிகா' பிராணாயாமத்தை என் முன்னால் வியப்படையும் வேகத்துடன் செய்து காண்பித்தபொழுது அந்த அறையில் உண்மையான ஒரு புயலே உருவாகி விட்டதைப் போலிருந்தது. பிறகு அவர் இடி முழக்க மூச்சை நிறுத்தி மிக மேம்பட்ட உயர் உணர்வு நிலையில் அசைவேதுமின்றி இருந்தார். புயலுக்குப்பின் உண்டாகிய அந்த அமைதிச்சூழல் தெளிவாக மறக்க முடியாதபடி நினைவில் இருக்கிறது. சில பிராணாயாமங்களைப் பயிற்சி செய்த பிறகு ஒரு யோகியின் உடல் அதன் கனத்தை இழந்து விடுகிறது. அப்பொழுது அவர் அந்தரத்தில் மிதக்கவோ அல் லது தவளையைப் போல் தாவவோ முடியும்.

முறையான யோகப்பயிற்சி செய்யாத மகான்கள்கூட கடவுளிடம் தீவிர பக்தி செலுத்தும்போது அந்தரத்தில் மிதந்ததாக அறிகிறோம்''.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அதன் பிறகு பாதுரி மகாசயரைச் சந்தித்தார். பள்ளிக்கூடம் விட்டதும் அந்த ரிஷியின் வீட்டிற்குச் செல்லும் இந்த 'யாத்திரைகளை' அவர் தொடர்ந்து செய்து வந்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகிறார்: பாதுரி யோகாசனத்தில் அமர்ந்திருக்கையில் பல மாணவர்கள் அவருடைய அருகில் கிடக்கும் அவரது பாதுகைகளில் ரூபாய்களை போடுவர். பாரதத்தில் பழக்கத்திலுள்ள இந்த மரியாதையான காணிக்கை சீர்கள் தங்கள் உலகச் சொத்துக்களை குருதேவரின் பாதங்களில் சமர்ப்பித்து விடுவதைக் குறிக்கிறது. நன்றியுள்ள நண்பர்கள், பக்தர்களின் நன்மையை விரும்பும் இறைவனின் மாற்று உருவங்களே.

அவருடைய ஒரு மாணவன் விடைபெற்றவாறு, பிதாமகனைப் போன்ற அந்த ஞானியை பக்தியுடன் நோக்கி, "குருதேவரே, நீங்கள் ஆச்சரியமானவர். நீங்கள் இறைவனைத் தேடுவதற்காகவும் எங்களுக்கு ஞானத்தைப் போதிப்பதற்காகவும் செல்வங்களையும் நலன்களையும் தியாகம் செய்திருக்கிறீர்கள்!" (அவர் சிறு வயதில் ஒருமுகமான யோக சாதனையில் இறங்கியபொழுது அவரது மிகப்பெரிய குடும்ப சொத்து அனைத்தையும் துறந்தாரென்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. அதற்கு பாதுரிமகாசயர் பதிலளிக்கிறார்;" நீ கதையையே மாற்றுகிறாயே!" அந்த மகானின் முகம் சிறு கண்டனத்தைத் தெரிவித்தது. "நான் மிகவும் அற்பமான சில ரூபாய்களையும் சிற்சில வசதிகளையும் இந்த முழுப்பிரபஞ்சத்தின் முடிவில்லாத ஆனந்தத்திற்காக துறந்தேன். அப்படியிருக்கும்போது நான் எதைத் தியாகம் செய்தேன்? செல்வத்தைப் பகிர்ந்துகொள்வதிலுள்ள ஆனந்தத்தை நான் அறிவேன். அது ஒரு தியாகமாகுமா? குறுகிய மனதுடைய உலக மனிதர்கள் தாம் உண்மையிலேயே நிஜமான துறவிகளாவார்கள்.

கையளவு எளிய உலக விளையாட்டுப் பொருட்களுக்காக ஈடு இணையற்ற தெய்வீக சொத்தைத் துறக்கிறார்களே! ஒரு தெய்வீகத் திட்டம் எந்த ஆயுள்காப்பு நிறுவனத்தையும்விட விவேகத்துடன் நம் எதிர்காலத்தைப் பாதுகாக்கிறது. இவ்வுலகம் முழுவதும் புறக்காப்பீட்டில் கவலையுடன் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்களுடைய கசப்பான எண்ணங்கள் அவர்களின் நெற்றியிலுள்ள வடுக்களைப் போலுள்ளன. நம் முதல் சுவாசத்திலிருந்தே நமக்குக் காற்று, பால் இவைகளைக் கொடுத்தவனுக்குத் தன் பக்தர்களின் அன்றாட வாழ்விற்கு எப்படி வழி செய்வது என்பது தெரியும்."

குருதேவர் பரமஹம்ஸர் கூறுகிறார்; "மாலையில் அவருடைய சீடர்கள் வரும்வரையில் நான் அந்த யோகியுடன் தனிமையிலிருந்தேன். பாதுரி மகாசயர் தன் ஈடற்ற சொற்பொழிவு ஒன்றைத் தொடங்கினார். அமைதியான வெள்ளமென அவரது சொற்பொழிவைக் கேட்க வந்தவர்களின் மனக்குப்பைகளை ஒதுக்கித் தள்ளி அவர்களை இறைவனை நோக்கித் திருப்பினார். அவருடைய குறிப்பிடத்தக்க உவமை கதைகள் மொழி தவறுகளின்றி வங்காள மொழியில் வெளிப்பட்டன. அந்த மாலையில் பாதுரி, மீராபாயின் வாழ்க்கையுடன் சம்மந்தப்பட்ட பல தத்துவக்கருத்துக்களை விவரமாக எடுத்துரைத்தார். மத்திய காலத்தவரான மீராபாய், ராஜபுதனத்தின் இளவரசி, தன் அரச வாழ்வைத் துறந்து மகான்களின் சங்கத்தை விரும்பினார். ஓர் உயர்ந்த சன்னியாசியான சனாதன கோஸ்வாமி, அவர் ஒரு பெண் என்பதற்காக அவளை வரவேற்க மறுத்தார். அதற்கு மீராபாய் அளித்த பதில், அவரைக் கொணர்ந்து அவள் திருவடிகளில் பணிய வைத்தது. மீராபாய் கூறினாள், "உங்கள் குருவிடம் கூறுங்கள், எனக்கு இந்த பிரபஞ்சத்தில் இறைவனைத் தவிர எந்த ஆண்மகனும் இருப்பது தெரியாது. நாம் எல்லோருமே அவன் முன் பெண்கள் தாமே?" (இறைவன் மட்டுமே முழுமையான சிருஷ்டி தத்துவம் என்றும் அவனது படைப்பு சக்தியற்ற மாயையே என்றும் கூறும் சாத்திரதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.)"

இதிலிருந்து மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வு குறித்து சொல்லப்போனால்,



ஒவ்வொரு யுகத்திலும் எத்தனையோ பெண்களும் இறைவனை இதயபூர்வமாக நேசித்து அவனுடன் இரண்டறக் கலந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவரான மீராபாய் ஐ மையமாக்கிக் கொண்டு கோஸ்வாமி என்ற சன்னியாசி மூலம் பெண்ணின் பெரு மைக்கு இறைவனுடனுள்ள அதீத பக்திக்கு பட்டை தீட்டியிருக்கிறான் அல்லது மாற்று கூட்டியிருக்கிறான் அன்பின் வடிவமான இறைவன். அது மீராபாய் மூலம் அந்த சன்னியாசிக்கு, அவனது திருவிளையாடலை நிகழ்த்தி ஒரு மிக மேன்மையான பாடத்தை புகட்டி அந்த சன்னியாசியின் அகங்காரத்தை அடக்கினான் இறைவன் என்பதுதான் உண்மை. அற்பமானதும் அழியக்கூடியதும் ஆனது உலகமும் உலகப்பொருட்களும் உலக வாழ்வும். ஆனால் அனைத்திற்கும் மேலானதும் ஆனந்த மயமானதுமான அழிவற்ற பேரின்பத்தைத் தேடி அடைவதே ஒருவரின் பேரிலக்காக இருக்க வேண்டும் என்று எல்லா மகான்களும் பாடம் கற்பிக்கின்றனர். ஆனால் 'அழிவுற்ற, அழிந்துகொண்டிருக்கும் உலகத்தையும் உலகப்பொருட்களையும் நேரில் கண்ட பின்னரும் உலக விளையாட்டுப்பொருட்களுக்காகஈடு இணையற்ற தெய்வீக சொத்தைத்துறக்கிறார்களே, அவர்கள்தாம் நிஜமான துறவி கள்' என்று மகான் பாதுரி மகாசயரின் திருவாக்கியம் எவ்வளவு சரியானது என்பதை நன்கு உணரமுடிகின்றது. உலகம் அப்படித்தான் இருக்கிறது என்பதை அவர் உணர்த்துகிறார். இதுபோன்ற திருவாசகங்களை சிந்தனையில் நுழையச் செய்து, நமக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் அன்புத்தந்தையும் பிரபஞ்ச நாயகனுமான இறைவனை அடைவதே நம் ஒவ்வொருவரின் பேரிலக்காக இருக்கவேண்டும் என்று குருதேவர் வலியுறுத்திக் கூறுவதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பதை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், கதிரவனின் ஒளி அனைத்து இடங்களிலும் அனைவருக்கும் எவ்வாறு வீசுகின்றதோ, அதே போன்று மனித ஆத்மாக்களை இறைவனுடன் சேர்க்கக்கூடிய, பூஜ்ய குரு தேவரின் தெய்வீக போதனைகள் என்றென்றும் எல்லா காலங்களிலும் ஒளியுற்றிருக்க வேண்டும். அவை அனைவரையும் ஈர்த்து இறைவனின் சாம்ராஜியத்தில் சேர்த்திட வேண்டும். .

'ஜெய் குரு'

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# இந்து மதமும் தமிழ்நாடும்

இந்துக்களின் தேசமாக இந்தியா இருந்தாலும், தமிழ்நாடு இந்துக்களின் மிகவும் முக்கிய நாடாகும். இன்னும் ஒருபடி மேலே சொல்லப்போனால் இந்து மதம் பிறந்ததே தென்னாடு என்றே சொல்லலாம். இன்று திராவிடம் என்ற மாயை தமிழ்நாட்டிற்கு சொந்தம் கொண்டாடுவது நகைப்பிற்குரியதாக இருந்தாலும், தமிழர் என்ற பெயரையும் அவர்கள் சொந்தம் கொண்டாடி தமிழர்கள் வேறு இந்துக்கள் வேறு என்று நகைச்சுவைகள் பல செய்து வருகின்றனர். அதுபோன்ற நகைச்சுவையாளர்கள் அறிந்து கொள்ள, தமிழர்கள்கள் இந்து மதத்தின் சொந்தக்காரர்கள் என்பதை தெளிவாக்கும் ஒரு தொகுப்பு இது...

இந்து சமயத்தின் ஏழு பெரும் பிரிவுகள்:

1. சைவம்
2. சாக்தம்
3. வைஷ்ணவம்
4. காணாபத்யம்
5. கௌமாரம்
6. சௌரம்
7. ஸ்மார்த்தம்

- சைவத்தின் முழுமுதற் தெய்வமான சிவனின் கோவில்களில் 283 இல் 276 தமிழ்நாட்டில் தான் உள்ளது...!
- கௌமாரத்தின் 21 முருகன் கோவில்களில் 18 கோவில்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளது.
- கானாபத்தியத்தில் அஷ்ட கணபதிகள் கோவில்கள் அனைத்தும் தமிழ்நாட்டில்தான் உள்ளது..!
- சாக்தத்தில் பராசக்தி நவதுர்க்கை கோவில்கள் அம்மன் கோவில்கள் பெண் தெய்வங்களுக்கு கோவில்கள் இருப்பது தமிழ்நாட்டில்தான்...!
- இந்து சமயத்தின் கிளை இணை துணை சமயங்களான சமணம், புத்தம் உருவானதும் தமிழ்நாட்டில்தான்.
- மேற்கண்ட ஏழு பெரும் பிரிவு தெய்வங்களையும் ஒட்டுமொத்த இந்துக்களாக வணங்கும் ஸ்மார்த்தர்கள் இருப்பதும் தமிழ்நாட்டில் தான்.
- 12 ராசிகள் மற்றும் 27 நட்சத்திரங்களுக்கான கோவில்கள் இருப்பது தமிழ்நாட்டில்தான்.
- சப்தவிடங்க ஸ்தலங்கள் இருப்பது தமிழ்நாட்டில்தான்.
- இந்து பண்பாட்டின் அடையாளம், இந்து பண்பாட்டின் வாழ்வியல்முறையே தமிழ்நாடு தான்!



வைணவத்தின் 108 வைணவ திவ்ய தேசத் தலங்களில் 96 உள்ளது. தமிழ்நாட்டில் தான்.

பஞ்சபூத கோவில்களில் நிலம், நீர், ஆகாயம், நெருப்புக்கான ஸ்தலங்கள்இருப்பது தமிழ்நாட்டில் தான்.

இந்து பண்பாட்டின் மருத்துவமான இயற்கை சித்த மூலிகை மருத்துவம் உருவானதே தமிழ்நாடு தான்

www.aanmeegamalar.com

ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோன்றி வாழ்ந்து முக்தி அடைந்தது தமிழ்நாட்டில் தான்.

சௌரத்தில் சூரியனை தெய்வமாக தைப் பொங்கல் தினத்தன்று வழிபடுவது தமிழ்நாட்டில் தான்.

பதினெட்டு சித்தர்கள் தோன்றி, வாழ்ந்து, ஜீவ சமாதி அடைந்ததும் தமிழ்நாட்டில் தான்...

நவக்கிரக கோவில்கள் அனைத்தும் இருப்பது தமிழ்நாட்டில் தான்.

வாழ்க்கை முறையுடன் ஆன்மிகத்தையும் இணைத்து வாழ்வது தமிழ்நாட்டில் தான்

பஞ்சபூத கோவில்களில் நிலம், நீர், ஆகாயம், நெருப்புக்கான ஸ்தலங்கள்இருப்பது தமிழ்நாட்டில் தான்.

www.aanmeegamalar.com





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

♦♦♦

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# தெய்வச் சுவை

குழுமியிருக்கும் மெய்யன்பர்களே! இறைவன் என்பவன் இந்த அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்தவன். படைத்தவன் தான் காப்பான். அவனை நாமும் எப்போதும் நினைத்தல் / பிரார்த்தனை செய்தல் வேண்டும். பிரார்த்தனை என்பது உறுதி.

இந்த உறுதியை நினைக்காமல் இருந்தால் என்ன? பக்தி செய்தால் ஒழிய இறைவன் தொடர்பு கொள்வதில்லை; நினைத்தாலும், நினைக்காவிட்டாலும் காப்பான். தெரிந்தால் தானே நினைக்கப் போகிறார்கள்? உயிர் என்பது மனிதனின் உடலில் இருக்கின்ற காலத்திற்குள், பேரறிவினைப் பெற்றுவிட வேண்டும். ஆண்டவனை சதாசர்வ காலம் உறுதியாக தொழுவதால் பெறலாம்.

பேரறிவு என்பது ஆண்டவனுக்கு சொந்தமானது. இது பகவானை நினைத்தவுடன் கிடைக்கும். தனித்தனியாக பூஜை செய்தாலும் கிட்டிவிடும். தனித்தனியாக நிறைய தெய்வங்கள் உள்ளன. எல்லாம் ஒன்றல்ல.. தனி.. கனகாம்பரம் / அல்லி தனி. எல்லாவற்றையும் கதம்பமாக கட்டும்போதுதான், அதற்கு நல்ல மதிப்பு. ஏராளமான தெய்வங்கள்.

பழம் எல்லாம் தெய்வீகத்தில் ஒன்றுதான் என்று சொல்லக் கூடாது. சுவீட்நெஸ் தான் ஒன்று. எல்லாமே வாழைப்பழம் தான். ராமன் மனிதருள் மாணிக்கம். துன்பத்தை ஏற்றான். ‘கோபம் கொள்வது அழகு’ என்றால் லட்சுமணனிடம். எனக்கு கோபம் வரக்கூடாது ஏன்? ஆதிசேஷன் அவதாரம். ஆதிக்ஷேஷன் சுவாமி ரங்கநாதனை விட்டுப் பிரியவே மாட்டான். அவனை என்ன சொல்லப்பட்டு இருக்கிறது?

‘நின்றால் குடையாம்’ மரம் போல் உயரமாகி, 5 கரங்களை பகவானுக்கு நிழல் கொடுப்பான். பகவான் தெரியும்போது ஆதிசேஷன் கண் ணுக்குத் தெரியும் எதற்கு ? 24 மணி நேரமும் எதையும் துலீண்டுதலாக எண்ணாவிட்டாலும். மகாவிஷ்ணுவிற்கு அணுசரனை. உதவி செய்ய வந்த உருவம். கண்மூடினால் தெரியவேண்டும். அந்த உருவத்தை படம் பிடித்தார்கள்.

ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலை.. பரம ஞாநி... எல்லாக் கலைகளும் தெரிந்தவன். ஒரு விஷயமும் தெரியாத முட்டாளாய் நாம் இருந்தால், ஆதிசேஷன் அனுக்கிரக பூதனாய் இருப்பான். அவனிடத்தில் எந்தக் கோபம் வராது... எல்லாம் தெரிந்தால் கோபம் வராது. அரைகுறையாய் இருந்தால் கோப ம் . ஆதிசேஷன் சொல்கிறான்.

அரைகுறையாயய இருந்தால் அவஸ்தை பகவானுக்கு . அதனால் (வேறு ஒன்றும் செய்யாமல் சுவாமி விஷயத்திலேயே முழுதும் இருந்தால்) அரைகுறையாய் இருப்பவன் கிட்ட, சுவாமி துன்பம் தாளாமல் வந்துவிடுவான்.

ஏதாவது ஒரு கணபதி வந்தால்தானே நல்லா இருக்கும். வாழைப்பழம் / பலாப்பழம் / சீதாப்பழம் / மாதுளை... எல்லாம் தனித்தனி. இனிப்பு தனியாக சுவைக்கலாம். ஒவ்வொரு பகவானையும் தனித்த னியாக சுவைக்கலாம்.

(11072010 ஞாயிறு ஞானிகளின் அருளுரையிலிருந்து தொகுத்தது)



– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## சீடன் கேள்வி ஞானி பதில்

**சீடன்:** ‘பாபம் , புண்ணியம்’ விளக்கங்கள் வேறுபடுகிறதே?

**ஞானி:** இறைவனை எண்ணாத காலம் பாபம்; நினைத்த நேரங்கள் புண்ணிய காலங்கள். பாபங்கள் மனிதனின் செய் கைகளில் கலந்திருக்கிறது. பிரதோஷ காலத்தில் உள்ளன்புடன் சிவனை ஆராதித்தால் பாபம் அவனருளால் காலத்துடன் கலந்து மறைகிறது. புண்ணியம் ஆசையை மனிதனிடத் தில் வைக்காது, துலீண்டாது. பாபம் அதைச் செய்யும். பாபங்கள் தொலைய புண்ணியங்கள் உதவுகின்றன.

**சீடன்:** வழிபாடுகள் எப்பொழுது விளங்கும்?

**ஞானி:** சிவனைப் பார்த்து பைத்தியம் பிடித்தால் தான் மனிதன் அமைதி அடைகிறான். பார்த்து பார்த்து செய்வதால் பூஜைகள், வழிபாடுகள் விளங்குகின்றன; சொல்லித் தந்து செய்வதால் அல்ல.

**சீடன்:** பூஜைகளின் பலன் அருளா, சித்தியா? விளக்குங்கள் சுவாமி.

**ஞானி:** பூஜைகளின் பலன் கடவுள். முழுமையானவன் இறைவன். புத்தக அறிவு, பூஜைகள் பற்றிய அறிவு முழுமையாக இருக்கலாம். அனுபவம் அரைகுறையாக இருப்பதால் கடவுள் வருவதில்லை. சித்தி. அருள் என்பது கடவுளுடன் வரும் விளைவுகள், அது வராததற்கு காரணம் நாம் அரைகுறையாக இருப்பதால்.

**சீடன்:** பூஜையை செய்யாத சில ஞானிகளிடம் கடவுள் இருக்கிறானே?

**ஞானி:** பங்கமில்லாத ஆத்மாக்களை தான் ஆண்டவன் நேசிக்கிறான். உன் பாரத்தை இறக்கியவனே உனக்கு வேண்டியவன். உன் பாரத்தை இறக்குபவன் கடவுள் ஒருவனே. இத்தகைய பைத்தியம் ஞானிகளிடம் கூடவே இருக்கிறான்.

**சீடன்:** ஞானிகளுக்கு இதனால் உடனடி பலன் என்ன?

**ஞானி:** மற்ற பொருள்கள் மேல் பைத்தியம் பிடிக்காமல் தடுக்கும் ‘கடவுள் பைத்தியம்’. பைத்தியக்கார உலகில் சந்தோஷத்துடன் ஆடும் அழகு, ஞானிகள் பார்க்கும் பகவானின் நடனமே.



ஆன்மிகமலர் மெயில் புக்




# ராசிகளுக்குரிய குணாதிசயங்கள்

பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளது. இதில் கோள்களும் அடங்கும், சூரியன், சந்திரன், பூமி போன்ற கோள்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை சார்ந்ததுதான்.

உதாரணத்திற்கு பூமியை எடுத்துக்கொண்டால் சந்திரன் சூரியன் போன்ற கிரகங்களையும், சுக்கிரன் புதன் போன்ற மற்ற கிரகங்களின் உதவியால்தான் உயிரோட்டமாக இருக்கிறது.

இதைப்போன்றுதான் மனிதர்களுக்கு ராசி, நட்சத்திரம் போன்றவற்றை வகுத்து வைத்தனர் முன்னோர். இந்த ராசியும் நட்சத்திரமும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொருவிதத்தில் மாறுபட்டிருந்தாலும், அந்த அந்த ராசிக்கும் நட்சத்திரத்திற்கும் இணையானவர்களால் பல பலன்கள் கிடைக்கும்.

அந்த வகையில் எந்த ராசிக்கு என்ன பலன் என்பதை எளிமையாக கொடுத்துள்ளோம். தொழில், கூட்டுத்தொழில், திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கு இதுவும் ஒரு வகையில் உதவிகரமாக இருக்கும். தொடர் தோல்வி, இழப்பு போன்றவற்றிற்கு ஒருசில நேரம் இதுபோன்ற ராசிகளின் குணாதிசயங்கள் கூட காரணமாக அமைய வாய்ப்பிருக்கிறது.

## ஸ்திர ராசிகள்:

**ரிசபம், சிம்மம், விருச்சிகம், கும்பம்**

இவர்கள் ஒரு தடவை முடிவு எடுத்திட்டா இவர்கள் பேச்சை இவர்களே கேட்க மாட்டார்கள். அதில் இருந்து மாறவும் மாட்டார்கள்.

தப்பா இருந்தாலும் சரியா இருந்தாலும் அதில் பிடிவாதமாக இருப்பார்கள்.

ரெண்டு ஸ்திர ராசிக்காரங்க சண்டையோ வாக்குவாதமோ செய்ய ஆரம்பித்தாலும் விடிய விடிய தொடரும். எங்கும் எதிலும் நிலைத்து நிற்பார்கள், தான் எடுத்த முடிவில் பிடிவாதமாக இருப்பார்கள்...

நிலையான வெற்றியை பெறுவார்கள்.... வாழ்க்கையில் ஜெயிக்காமல் ஓய மாட்டார்கள் வாழ்வில் ஏதேனும் ஒரு சாதனையை செய்வார்கள்

## உபய ராசிகள்:

**மிதுனம், கன்னி, தனுசு, மீனம்**

அப்படி செய்யலாமா இப்படி செய்யலாமா என யோசித்து கொண்டே சொதப்பி விடும் புத்திசாலிகள். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் கில்லி...

ஆனா இவங்களுக்கு இவங்களே வெச்சிக்குவாங்க கொள்ளி. எதிலும் இரட்டை நிலைதான். மரம் ஏறும் போது ஒரு புத்தி இறங்கும்போது ஒரு புத்தி என்பார்களே அது இவர்களுக்கு பொருந்தும்.மனசு மாறிக்கிட்டே இருக்கும். ஏமாற்றம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அறிவாளிகள், யாரையும் பார்த்தவுடன் கணிக்க கூடியவர்கள். ஆன்மீகத்தில், பண விசயத்தில் சிறந்தவர்கள். இவர்கள் துணை இருந்தால் வாழ்வில் வெற்றி அடையலாம்.

## சர ராசிகள்:

**மேசம், கடகம், துலாம், மகரம்**

உறுமீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பார்கள். பாயிண்ட் பாயிண்ட் வரட்டும் என காத்திருந்து நெத்திய்டியாக தாக்குவதுதான் இவர்கள் பாணி.

எதிலும் வேகம்,விவேகம் .எல்லா விசயத்திலும் அனுபவம் உடையவர்கள்...

ஊர் நாட்டாமை இவர்கள்தான் என்பதால் எல்லா பிரச்சினைக்கும் இவர்கள் நான் சொல்றேன் தீர்ப்பு என முன்னாடி ஏதாவது ஆதாயம், கிடைக்குமான்னு பார்ப்பாங்க...

எப்பவும் பெரிய ஆட்களுடன் பழகத்தான் விரும்புவார்கள்..தன்னை பெரிய ஆட்களாக காட்டிக்கொள்ளவே விரும்புவார்கள்..

மிகப்பெரும் உலக சாதனையாளர்கள், மகான்கள், உலக தலைவர்கள் இந்த ராசிகளில் பிறந்திருக்கின்றனர்.

– லட்சுமி, கீழ்க்கட்டளை

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# ஏழுமலையான் கோயில் மணி குழந்தையான அற்புதம்



கோவில் என்றால் மணிஓசை மிகவும் முக்கியமான ஒன்றாகும், ஆனால் திருப்பதியில் வீற்றிருக்கும் பெருமாளின் சன்னதியில் இன்றைக்கும் மணியோசை ஒலிப்பதில்லை. இதற்கான காரணம் மிகவும் சுவாரசியமானதாகும்.

காஞ்சிபுரத்திற்கு அருகேயுள்ள துப்புல் கிராமத்தை சேர்ந்தவர்கள், அனந்தசூரி தோத்தாரம்பா என்கிற வைணவ தம்பதியர்.

குழந்தை பாக்கியம் வேண்டி இருவரும் கால்நடையாக திருப்பதி சென்றனர். அன்றிரவு, இருவரும் அங்குள்ள சத்திரத்தில் தங்கியிருந்த போது, திருமலைவாசனின் சந்நிதியில் அடிக்கப்படும் மணியை, தான் விழுங்கியது போன்று கனவு கண்டார் தோத்தாரம்பா அம்மையார். இந்த கனவு ஏற்படுத்திய அதிர்ச்சியால் திடுக்கிட்டு கண் விழித்தார் தோத்தாரம்பா அம்மையார்.

தான் கண்ட கனவை கணவரிடம் கூறிக்கொண்டிருந்த அதே நேரம் திருமலை ஏழுமலையான் சன்னதியில் ஒரே பரபரப்பு!... பூஜை மணியை காணாததால் ஆளுக்கொரு பக்கமாய், அனைவரும் பதட்டத்துடன் தேடிக்கொண்டிருந்தனர்.

அப்போது அசரீரியாய் ஒரு குரல்! "அந்த மணியை யாரும் தேட வேண்டாம்! புரட்டாசி, சிரவண நட்சத்திரத்தில் அந்த மணி ஒரு அற்புத மனிதராக, வேங்கடநாதன் என்கிற பெயரில், துப்புல் அனந்தசூரி தோத்தாரம்பா தம்பதியருக்கு பிறப்பார்! அவர் பேச்சு மணி மணியாய் இருக்கும்!''

அசரீரி வாக்கு படி பிறந்த அக்குழந்தையே ஸ்ரீவேதாந்த தேசிகன். திருமலை பெருமான் சந்நிதியில் இருந்த கைமணியே, மணியான குழந்தையாக அவதரித்ததால், திருமலையில் இன்றும் பூஜை, தீபாராதனை நேரங்களில் கூட மணி அடிப்பது இல்லை.







# இதயத்தை காக்கும் கட்டிப்பிடி வைத்தியம்

இரத்தம், இதயம் சார்ந்த நோய் உள்ளவர்களுக்கு இயற்கை மருத்துவமாக தினமும் 5 நிமிடங்கள் 3 வேளை மருத மரத்தை கட்டிப்பிடித்து வந்தால் போதும். இவ்வாறு செய்யும்போது உடலுக்கும் மனதுக்கும் இயற்கையாகவே ஒருவித ஆற்றலும், நமது தோலில் உள்ள துவாரங்கள் வழியாக உள் உடலுக்கு தேவையான இரத்த சீரோட்டம் போன்றவை அற்புதமாக நடைபெறுவதால், இதயம் சார்ந்த பிரச்சனைகளுக்கு எளிதாக தீர்வு கிடைக்கிறது.

மருத மர பட்டையிலிருந்து தயாரிக்கப்படும்... அரிஷ்டம் என்னும் மருந்து. மிகவும் அற்புதமான பலனைத் தருகிறது. பெரும்பாலான சித்த மருத்துவர்கள் இந்த மருந்தைப் பயன்படுத்த அறிவுறுத்துகின்றனர். இரத்தம், இதயம் சார்ந்த பெரும் பாலான மருந்து கலவைகளில்... இதன் பட்டையை முதன்மை மருந்தாக பயன்படுத்துகிறார்கள்.

மருதமரம், மருகமரம், அர்ஜுணமரம், நீர்மருது போன்ற வழக்கப் பெயர்களை கொண்டு அறியப்படும் பெருமர வகையை சேர்ந்த இம்மரத்தின் தாவரவியல் பெயர் TERMINALIA ARJUNA என்பதாகும்.

வளரும் மண்ணின் தன்மைக்கேற்ப நிறம் மாறுபடுவதால் பில்லமருது, கருமருது, வெண்மருது என்று பிரிக்கபட்டாலும் இதன் மருத்துவ பயன்பாடு ஒன்றாகவே இருக்கிறது. LIPID PEROXIDATION என்ற முறையால் பிரியும் வேதிப் பொருள் அதிக மிருப்பதால் இரத்தம் உறைதன்மையை நிதானபடுத்தும் எனவே தான் இரத்தம், இதயம் சார்ந்த பெரும்பாலான மருந்து கலவைகளில் இதை முதன்மை மருந்தாக பயன்படுத்துகிறார்கள். வைகை நதிக்கரையின் ஓரிடத்தில் மருது மரங்கள் அடர்த்தியாக இருந்து அந்த இடம் மருதத்துறை என்றாகி அதுவே மருவி இப்போதைய மதுரை என்றாகியிருப்பதாய் வரலாற்று குறிப்பு.

பழைய கட்டுமான தொழிலில் அதிகமாக பயன்பட்ட தூண் களும் மருது தான்... எனவே இதை Queens pride of INDIA என அழைத்தார்கள்.



# முதுகு வலிக்கு பெரியவா சொல்லும் மருந்து...

பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, ரொம்ப கஷ்டப்பட்டு எழுந்தார் ஒரு பக்தர்!

நடு முதுகுத்தண்டில் தாங்க முடியாத வலி!

“நடு முதுகுல... பயங்கர வலி பெரியவா..! எல்லா வகை... வைத்தியமும் பாத்தாச்சு! ஒண்ணும் கேக்கல! பணம் கரைஞ்சது தான் மிச்சம்! வலி போகல!...பெரியவாதான் இத.. குணப்படுத்தணும்” என்றார்.

அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.

உடனே பெரியவாள் ‘முன்னெல்லாம்.....செக்குல ஆட்டின நல்லெண்ணெய் தேச்சு, கொஞ்சம் ஊற வச்சு, வெந்நீர்ல... சீக்காயோ, அரப்போ தேச்சு குளிப்பா!. இப்போ அவசர யுகம் ! எண்ணெய் தேச்சு குளிக்கவே டைம் இல்ல.! “சனி நீராடு”ன்னு... ஸ்கூல்ல படிக்கறதோட செரி.’ [இப்போ அந்த படிப்பும் இல்லை]

அத... follow பண்ணணுங்கறது மறந்து போச்சு! அரப்பு, சீயக்கா பொடிக்கு பதிலா, தலைக்கு தேச்சுக்க என்னென்னமோ வந்திருக்காம்....! எல்லாம் கெமிக்கல்ஸ் சேந்தது.! பின்னால.... கெடுதின்னு தெரிஞ்சாலும், அதையேதான் வாங்கறா...! போகட்டும் போ! நீ இனிமே.... ரெகுலரா.... எண்ணெய் தேச்சுண்டு, வெந்நீர்ல குளி! மிளகு ரசம், பெரண்டை துவையல் பண்ணி சாப்டு..! என்ன?” என்றார்.

“கட்டாயம் பெரியவா சொன்னபடியே பண்றேன்” என்றார் அந்த பக்தர்.

மூணு மாதம் கழித்து வந்தார் முதுகுவலிக்காரர்.

வலி போய்விட்டதாம்.!

எண்ணெய் தேச்சு வெந்நீர்ல குளியல், மிளகு ரசம், பெரண்டை துவையல் இந்த மூன்றின் சேர்க்கை பற்றி யார் ஆராய்ச்சி பண்ணினால் என்ன, பெரியவா சொன்ன சிம்பிள் வைத்தியம் கை மேல் பலன் கொடுத்திருந்தது.

பெரியவா திருவாக்கிலிருந்து சில health tips...

வீடுகள்ல, மூணு எண்ணெய் எப்பவும் இருக்கணும்......

1. நல்லெண்ணெய் விளக்கேத்த, சமையல் பண்ண, எண்ணெய் தேச்சு குளிக்க;
2. விளக்கெண்ணெய் வருடத்தில் ரெண்டு தரம், காலைல வெறும் வயித்துல குடிச்சா..... வயிறு செரியா இருக்கும். வயித்துவலி இருந்தா, கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து தொப்புளை சுத்தி நன்னாத் தடவிண்டா செரியாப் போய்டும். சூடு தணியும். பாதத்ல வெடிப்புகிடிப்பு, புண்ணு இதெல்லாம் வராது.
3. வேப்பெண்ணெய் வேப்பெண்ணையை தெனமும் கை, கால், முட்டிகள்ல தடவிண்டா, முட்டி வலி வரவே வராது.

[பெரியவாளும் தினமும் கை, கால் முட்டியில், வேப்பெண்ணெய் தடவிக்கொண்டு குளிப்பாராம்]

தெனமும் குளிச்சதும், ரெண்டு காலையும், பாதத்தையும் நன்னாத் தொடச்சுக்கணும். நம்ம ஒடம்புல, காலுதான் முக்யமான பாகம். பாதத்தை நன்னா கவனிச்சுண்டா, ஒடம்பும் நன்னா இருக்கும். ராத்திரி படுத்துக்கறதுக்கு முன்னாடி, பாதத்தை நன்னா அலம்பிண்டு, ஈரம் போகத் தொடச்சிண்டு படுத்துக்கணும்.

அந்த காலங்கள்ல, வெளியிலேர்ந்து வந்தா... வாய் கொப்பளிச்சுட்டு, கைகால், குதிகால்.... அலம்பிண்டு தான் வீட்டுக்குள்ளயே நொழைவா!

இப்போ...? செருப்பே.... வீட்டுக்குள்ளதான கெடக்கு! பின்ன... ஏன் வியாதி வராது? என்று கூறுகிறார் மஹா பெரியவாள்.

– சங்கர்







விரைவில்
aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
2018 சரஸ்வதி பூஜை முதல்
புதிய சேவை துவக்கம்



# தீய குணங்களை அழிக்கும் விரத நாட்களே

# நவராத்திரி விழா

சிவனுக்கு சிவராத்தியைப் போன்று அம்மனுக்கு நவராத்திரி என்பது உகந்த விஷேச தினமாக போற்றப்படுகிறது. இந்த நவராத்திரி நான்கு வகையாக உள்ளது.

ஆடி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி வாராஹி நவாராத்திரி என அழைக்கப்படும்.

புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி சாரதா நவாராத்திரி என அழைக்கப்படும்.

தை மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி சியாமளா நவாராத்திரி என அழைக்கப்படும்.

பங்குனி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண் டாடப்படும் நவராத்திரி வசந்த நவாராத்திரி என அழைக்கப்படும்.

இதில் ஒரு படி மேல உயர்வாக சொல்ல வேண்டுமானால், ஒளியும் இருளும் சம பங்காகக் கொண்ட சுற்றில் ஒளிக்காலத்தில் வசந்த நவராத்திரியும், இருள் காலத்தில் சாரதா நவராத்திரியும் என பெயர் பெற்றுள்ளது. இதில் சாரதா நவராத்திரியே விரதமாகவும் பண்டிகையாகவும் விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது.

அவ்வாறான இந்த நவராத்திரி ஒன்பது நாட்களிலும் முறையே மூன்று நாட்களுக்கு பார்வதி, லட்சுமி, சரஸ்வதி என வழிபடுவது நன்மையை அளிக்கும்.

சாரதா நவராத்திரியை ஸ்ரீ ராமரும், ஸ்ரீ கிருஷ்ணரும் வழிபாடு செய்துதான் தங்களது கஷ்டங்களில் இருந்து விடுபட்டதாக புராணங்கள் கூறுகின்றன.

நவராத்திரியின் ஒன்பது நட்களும் பராசக்தி ஒவ்வொரு தேவியின் வடிவில் ஒருவயது முதல் பத்து வயது கன்னிப்பெண் வடிவில் அவதாரம் செய்கிறார். கன்னியின் வயதிற்கேற்ப ஒவ்வொரு நாளும் ஒரு கன்னிகையாக ஒன்பது நாள் ஒன் பது கன்னிகைகளையும் ஒன்பது சுமங்கலிகளையும் பூஜை செய்வது அளவிட முடியாத புண்ணியம் உண்டாகும்.

## நவராத்திரி வரலாறு

சும்பன், நிசும்பன் என்ற அண்ணன், தம்பி இருவரும் அரக்கர்கள். அவர்களது அக்கிரம ஆட்சி தாங்காமல், மக்கள் தவித்திருக்கின்றனர். இந்த அரக்கர்களை எப்படியாவது அழித்து, மக்களைக் காப்பாற்ற வேண்டும் என, சிவா, விஷ்ணு, பிரம்மா மும்மூர்த்திகளிடம், தேவர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

மும்மூர்த்திகளும், மகா சக்தியைத் தோற்றுவித்து, அவளுக்குத் தங்களது சக்தியையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் அளித்தனர். தேவி, அழகிய பெண் உருவம் எடுத்து, பூலோகத்திற்கு வந்தாள். அரக்கர்களின் வேலை யாட்கள், சண்டன், முண்டன் என்ற இருவரும், இந்த அழகுப் பதுமையான மகாசக்தியைப் பார்த்ததும், தங்களது ராஜாக்களுக்கு ஏற்றவள் இவள் என முடிவு செய்து, தேவியிடம், தங்களது ராஜாக்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினர். அப்போது தேவி, தான் ஒரு சபதம் செய்திருப்பதாகக் கூறி, ''யார் என்னை போரில் வெல்கின்றனரோ, அவர்களைத்தான் மணப்பேன்' என்றாள்.

அதை ஏற்றுக் கொண்ட சும்பன், நிசும்பனும் தனது அடியாட்கள் ஒவ்வொருவராக போருக்கு அனுப்பி வைக்கிறான்.

இவ்வாறாக அனைத்து அரக்கர்களையும் தேவி துவம்சம் செய்து அழித்து விடுகிறாள். இவ்வாறு ஒவ்வொருவரையும் அழித்து இறுதியில், சும்பன், நிசும்பன்களையும் அழித்து விடுகிறாள் தேவி.

இவ்வாறு போர் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெற்று முடிவிற்கு வந்ததை, ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் இருக்கும் கெட்ட குணங்களை அளிக்கும் விரத நாட்களாக மாற்றியுள்ளனர் நமது முன்னோர்கள்.

முதல் மூன்று நாட்கள் துர்க்கா பூஜையின் போது, தேவி மலை மகளாக இருந்து இச்சா சக்தியை, அதாவது, நமக்குள் இருக்கும் கெட்ட எண்ணங்களை அழிக்கும் தீர்மானத்தைத் தருகிறாள்.

இரண்டாவது மூன்று நாட்கள் லட்சுமியாக இருந்து, நமக்கு க்ரியா சக்தியை, அதாவது, வேண்டிய எல்லா செல்வங்களையும் கொடுத்து, நம்மை முழு மனிதனாக ஆக்குகிறாள்.

மூன்றாவது மூன்று நாட்கள் சரஸ்வதியாக உருவாகி, நமக்கு ஞான சக்தியை அருளி, நாம் மோட்சம் அடையும் வழியைக் காட்டுகிறாள்.

மேற்கண்டவாறு மூன்று சக்திகளுக்கும் சேர்த்து ஒன்பது நாட்கள் விரத முறையை வகுத்து அந்த நாட்களை நவராத்திரி விழாவாக கொண்டாடி வந்துள்ளனர் நமது முன்னோர்கள்.

கல்விக்கு உரிய சரஸ்வதி தேவி, செல்வத்துக்கு உரிய லட்சுமி தேவி, வீரத்துக்கு உரிய பார்வதி தேவி ஆகிய முப்பெருந்தேவியரையும் 9 நாட்கள் வழிபடுவதே நவராத்திரி என்று வகுத்து. முதல் 3 நாட்கள் சக்திக்கு உரியதாகவும், அடுத்த 3



நாட்கள் லட்சுமி தேவிக்கு உரியதாகவும், கடைசி 3 நாட்கள் சரஸ்வதி தேவிக்கு உரியதாகவும் கொண் டாடப்படுகிறது. இவ்வழி பாட்டின் மூலம் வீரம் செல்வம் கல்வி என்றும் மிகப் பெரும் பேறுகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.



### சரஸ்வதி பூஜையின் விளக்கம்

பண்டிகைகளில் பூஜை என்ற அடைமொழி சேர்ந்திருப்பது சரஸ்வதி பூஜைக்கு தான். தீபாவளி பூஜை, பொங்கல் பூஜை என்று சொல்வதில்லை. பூஜை என்ற சொல் பூஜா என்பதில் இருந்து பிறந்தது. பூ என்றால் பூர்த்தி. ஜா என்றால் உண்டாக்குவது. தான் என்ற அகங்காரம், அடுத்தவனை விட நன்றாக வேண்டுமென்ற பொறாமை, உலக வாழ்வு நிரந்தரமானது என்ற எண்ணம் ஆகியவை மனித னை ஆட்டிப்படைக்கின்றன.

இதையே சைவசித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை என்கிறார்கள். இந்த மும்மலங் களையும் அகற்றி ஞானத்தை உண்டாகச் செய் வதே பூஜை.

சரஸ்வதி கல்வியாகிய ஞானத்தை தருபவள் என்பதால், அவளது விழாவுக்கு மட்டும் பூஜை என்ற அடைமொழி இணைந்தது. சரஸ்வதி பூஜையன்று கல்வி, கலைகள் என எது தொடங் கினாலும் ஜெயமாக முடியும் என்பது நம்பிக்கை.

மழலை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற் கும் பாட்டு, இசைக் கருவிகள் பயிற்சி, நடன பயிற்சி, பிறமொழி பயிற்சி, புதிதாக ஒரு தொழி லை கற்றுக்கொள்வது ஆகியவற்றை இந்த நாளில் தொடங்கினால் சரஸ்வதி தேவியின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். அன்றைய தினம் குழந்தைகளின் கை பிடித்து, பரப்பி வைத் திருக்கும் நெல்லில் 'அ' என்று எழுத கற்றுக் கொடுப்பது 'வித்யாரம்பம்' எனப்படுகிறது.

### ஆயுத பூஜை

மனிதனுக்கு உதவும் அனைத்தும் ஆயுதங்கள் என்று போற்றப்படும். ஆயுதம் என்பதன் உண் மையான பயனை உணர்த்தத்தான் ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. உயிர்ப் பொருள்கள், உயிரற்றப் பொருட்கள் அனைத்திலும் நீக்கமற இறைபொருள் உறைந்துள்ளது.

வாழ்வில் நம் உயர்வுக்கு உதவும் ஆயுதங்களை போற்றும் விதம் அவற்றையும் இறை பொருளாகப் பாவித்து வணங்குவதே ஆயுதபூஜை எனவும் சொல்லலாம். இதுவரை தொழில் சிறப்பாக நடந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் இனி சிறப்பாக நடப்பதற்கு அருள் வேண்டும் வகையிலும் இப் பண்டிகை கொண் டாடப்படுகிறது.

மகிஷனைவென்ற துர்க்கை தீயவை அழிந்து நல்லவை வெற்றி பெற்ற நாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. மகிஷாசுரனை அழிக்க தேவியானவள் துர்க் கை வடிவம் எடுத்தாள். 9 நாட்கள் நீடித்த போர், விஜயதசமியன்று முடிவுக்கு வந்தது. தீய சக்தியான மகிஷாசுரனை துர்கா தேவி வதம் செய்தாள். நல்ல சக்தியின் வெற்றி திருவிழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது என்கின்றன புராணங்கள்.

இந்த நாளில் அன்னை துர்கா தேவியை வேண்டி எந்த செயலையும் தொடங்கினால் தீமைகள் விலகி, நலங்களும் வளங்களும் சேரும் என்பது நம்பிக்கை.

### நவராத்திரி விரதம், பூஜையால் கிடைக்கும் நன்மைகள்

நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக கூறப்படுகிறது. ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று கூறப்படுகிறது.

சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகலசெல்வங்களையும் பெறலாம்.

விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில் களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும். நவராத்திரி நாட்களில் இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும்.

ஈசனும், அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ்சலில் ஆடுகின்ற தரிசனத்தை 9 நாட்களும் கண்டால் நவராத்திரி பூஜை செய்தபலன் கிடைக்கும்.

நவராத்திரி நாளில் வரும் சப்தமி திதியன்று வழிபட்டால் ஸ்ரீஹயக்ரிவப் பெருமாளின் அருளைப் பெறலாம். அன்று ஸ்ரீலலிதாசகரஸ்ர நாமத்தையும் நவாக்சரி மந்திரத்தையும் ஓதுவது கூடுதல் பலன்களைத் தரும். அனைத்திலும் தேவியே உள்ளாள் என்பதை உலகுக்கு உணர்த்தவே நவராத்திரி நாட்களில் கொலு வைக்கப்படுகிறது.

புரட்டாசி நவராத்திரியில் மட்டுமே கொலு வைக்கிறார்கள். ஆனால் நான்கு விதமான நவராத்திரி நாட்களிலும் கொலுவைத்தால்தான் அம்பிகை அருள் கிடைக்கும் என்பது சிலரின் கருத்தாகும்.

வீட்டில் கொலு வைத்தால், அம்பிகை நம் வீட்டில் எழுந்தருளி விட்டாள் என்பது நம்பிக்கை யாகும். ஒரு நவராத்திரிக்கு கொலு வைத்தால் பிறகு வாழ்நாள் முழுவதும் நவராத்திரி நாட்களில் கொலு வைக்க வேண்டும் என்கிறார்கள்.

நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும் செய்வதே சரியான வழிபாடாகும் என்று கூறப்படுகிறது நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும்.

நவராத்திரி நாட்களில் சுண்ணாம்பு மாவி னால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும்.

அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர்மறையான விளைவு களே உருவாகும்.

நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவாள். நவராத்திரி 9 நாட்களும் வாசலில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும். கொலு வைத்திருப்பவர்கள் அதன் முன் நவக்கிரக கோலம் போட்டால் அம்பாள் அனுக்கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.

தினந்தோறும் நவராத்திரி பூஜையின் நிறைவாக, பலவிதமான மங்கலப் பொருட்களை (மஞ்சள், குங்குமம், வளையல்,ரிப்பன் போன்றவை) ஏழைகளுக்கு தானமாக அளிக்க வேண்டும். தனித்து தானம் செய்வதை விட, பலரும் ஒன்று சேர்ந்து, மங்கலப் பொருட்களை மிகப் பெரிய அளவில் தானமாக அளிப்பதே சிறப்பானது.

தான தர்மங்கள்தான் பூஜைகளை நிறைவு செய்ய உதவிகின்றன. ஆகவே நவராத்திரியில் தானமளிப்பது மிகமிக முக்கியம்.

கன்னிப் பெண்களுக்குப் புதிய ஆடை முதலியவை பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது நவராத்திரி விழாவின் முக்கிய அம்ச மாகும்.

– ஷ்யாம்சுந்தர்


# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033

# ஒவ்வொருவருக்குள்ளும், கிருஷ்ணனும் இருக்கிறான், அர்ஜுனனும் இருக்கிறான், சகுனியும் இருக்கிறான்

## மூன்று குணங்களுமே, நமது மனதின் வெளிப்பாடு

குண்டலினி சக்தியின் அதிர்வலைகள், உயிரை இயக்குகிறது. உயிர் உடம்பை இயக்குகிறது. இது மட்டுமல்ல, உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுக்களிலும் குண்டலினி சக்தியின் வெளிப்பாடு சூட்சமமாக நிறைந்திருக்கிறது. இது மனித உடம்பில் நாடிகளின் மூலம் தனது இயக்கத்தை கொண்டுச்செல்கிறது. இந்த நாடிகள் அதமுகமாய் அதாவது கீழ் நோக்கி செயல்படுகிறபோது பஞ்ச பூதங்களின் கலவைகளான உடம்பு சம்மந்தப்பட்டு கருவிகள் மூலமும், கர்ம இந்திரியங்கள் மூலமும் விழிப்படைகிறது. இந்த விழிப்பு நிலையில் உடம்பும், மனதும் சிற்றின்பத்தை நோக்கி ஓடுகிறது. சிற்றின்பத்தை ஆனந்த மயமாக பார்க்கிறது.



இதே சக்தி, ஊர்த்துவ முகமாய் அதாவது மேல் நோக்கி எழும் போது சகஸ்ர தளத்தில் ஆற்றலான தனது நிஜ உருவத்தை இழந்து அறிவுமயமாக மாறுகிறது. அதாவது மனித உடம் பில் ஆற்றலானது சகஸ்ரத்தில் அறிவுமயமாகி அன்பில் ஒடுங்குகிறது. இப்படி அன்பில் ஒடுங்கும் நிலையை நமது சித்தர்கள் சிவசக்தி ஐக்கிய நிலை என்றார்கள். சிவசக்தி ஐக்கியமே மனித உடம்பில் உள்ள ஷோம, சூரிய, அக்னி என்ற மும்மண்டலங்களாக ஒளிர்கின்றன.

சிவசக்தி வடிவான குண்டலினி சக்தி மூலாதாரம் முதல், சகஸ்ரதளம் வரையில் உள்ள ஷட் சக்கரங்களை தனது சூட்சம உடம்பாக எடுத்துக் கொள்கிறது எனலாம். அப்படி எடுத்து கொண்டதனாலேயே சக்தி வசப்பட்ட சிவம் அல்லது சிவம் வசப்பட்ட சக்தி ஸத்சித்ஆனந்தமாக பரிணமிக்கிறது. அதாவது குண்டலினி சக்தி எழுச்சி ஜீவனை அம்மையப்பனை நோக்கி தள்ளிச்செல்கிறது. இதை நமது கண்களால் காண முடியாது, காது களால் கேட்க முடியாது, நம்மிடம் இருக்கும் புலன்கள் எதற்கும் அதை புரிந்து கொள்ளும் சக்தி இல்லை.

ஆனால் அந்த ஆனந்தநிலையம் நமக்கு தெரியும். நாம் அதை அனுபவிப்போம். காரணம் நமது ஆத்மாவில் உள்ள மூன்றாவது கண், சிவசக்தி ஐக்கியத்தை கானவல்லதாக இருக்கிறது.

இப்படி சிவசக்தி ஐக்கியமாகி ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற எழுச்சி பெற்ற குண்டலினியை புஜங்கி, சப்தபிரம்மம், பிராணசக்தி, ப்ரகிரிதி, மாத்ருகா, ஈஸ்வரி, குடிலங்கி என்ற சிறப்புப்பெயர் கொடுத்து லலிதா சகஸ்ரநாமம் சிறப்பித்து கூறுகிறது.

மனித உடல், பஞ்சபூதங்களால் செய்யப்படுவது உண்மை. அப்படி செய்யப்படுகிற உடல்கள் அனைத்தும், ஒரே விதமாக இல்லாமல் பலவிதமாக இருப்பதற்கு காரணங்கள் உண்டு. ஒரு உடல் அழகாக இருக்கிறது. இன்னொன்று அழகுக்கு சம்மந்தம் இல்லாமல் இருக்கிறது. ஒன்று பரிபூரணமாக இயங்கக்கூடிய விதத்தில் இருக்கிறது. மற்றது இயங்க முடியாமல் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு உடலும் தனித்தனி விதமாக சிருஷ்டிக்கப்படுவதற்கு என்ன காரணம் சந்தேகமே இல்லை. உயிர்களின் முன்வினை பலன்தான். சரீரத்தின் வடிவமாக உயிர்களுக்கு கிடைக்கப்பெறுகிறது. இப்படி உயிர்கள் தோன்றுவதற்கான மூலக்கருத்துக்களை நமது சித்தர்கள் தெளிவாக கூறுகிறார்கள்.

உலகை படைப்பதற்கு விருப்பமுடைய இறைவன் முதலில் உயிரையும், பிரகிருதியையும் பிணைக்கிறார். பிரகிருதியில் இருந்து சத்வ குணம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய முக்குணங்கள் பிறந்து அவைகள் உயிரையும், உடம்பையும் பிணைக்கின்றன. முக்குணங்கள் வெளிப்படையாக தோன்றுவது இல்லை. ஆனால் பிரகிருதியோடு சேர்க்கை பெறும்போது அவ்யத்தம் என்ற வெளிப்படும் பொருளாக மாறுகிறது. ஆனாலும் இதற்கு முழு உருவம் கிடையாது. குணங்களுக்கு உருவங்கள் இல்லை என்றாலும் வெளியில் தெரிவது எப்படி? என்று கேட்கலாம்.

சூரியனின் வெளிச்சம் இன்ன நிறத்தில் உள்ளது என்று சொல்ல முடியாது. காரணம்




ஆன்மிகமலர் மெயில் புக்

அது நிறம் இல்லாதது. ஆனால் அந்த நிறம் அற்ற நிலையில் இருந்தே ஏழு வண்ணங்களும் தோன்றுகிறது.

அதுபோலவே முக்குணங்களும் மூல பிரகிருதியில் மறைந்திருக்கும் சுத்த சத்துவ நிலையில் தோன்றுகிறது. நீராவி கையில் பிடிக்கும் அளவிற்கு திடம் இல்லாதது, உருவம் இல்லாதது, காற்றைப்போல நாலாத் திசையிலும் அலையக்கூடியது. ஆனால் அதே நீராவி நெருக்கம் அடையும் போது மேகமாக மாறி மழையாக கொட்டுகிறது. பிரகிருதியிலும் நீராவி போல மிதந்து கொண்டிருந்த முக்குணங்கள் சுத்தசத்துவம் என்ற நெருக்கத்தை அடையும் போது உருவமாக மாறுகிறது. அதாவது இதன் விளக்கம் என்னவென்றால் உடல் முழுவதும் பரவியிருக்கும் முக்குணங்கள் உடலின் நெருக்கத்தால் மனம் என்ற ஒன்றாக உருவாகிறது.




முக்குணங்களில் சத்வ குணம் என்பது நிர்மலத்தன்மை உடையது, ஒளிமயமானது, ஞானம் நிறைந்தது. சன்மார்க்கத்தில் ஈடுபடக் கூடியது. சிற்றின்பத்தை புறம் தள்ளுவது இதன் ஆதிக்கத்தில் இருப்பவர்கள் ஞானிகள், மகான்கள், முனிவர்கள் இவர்கள் நாட்டையும், காட்டையும், உறவையும், பகையையும், பொன்னையும், மண்ணையும் ஒன்றாக கருதுபவர்கள். இந்த சத்வகுணம் இவர்களுக்கு மனதிலிருந்தே தோன்றுகிறது. இப்படி மனதிலிருந்து தோன்றுகிற இன்னொரு குணம் ரஜோ குணம். இது விருப்பமே வடிவெடுத்தது, ஆசை மிகுந்தது.

மனிதனை தொழில் செய்யத்தூண்டுவது, உட்காராதே எழுந்து ஓடு, வேண்டிய மட்டும் உழை என்று துரத்தும். வெற்றி வந்தால் சிரிக்கச்செய்யும். தோல்வி வந்தால் அழவைக்கும்.

மூன்றாவதாக உள்ள தமோ குணம் மயங்கு வது, மயக்க வைப்பது. எல்லாம் முடிந்தது போடா என்று சலிப்பைத்தருவது. அப்பன் பாட்டன் சோறு போடுவான் என்று சோம்பிக்கிடப்பது, அறியாமை நிறைந்தது.

அடுத்தவன் சொத்தை அபகரிக்கவும் காத்திருக்ககூடியது. இந்த மூன்று குணங்களுமே பிரகிருதி மூலமாக நமது உடம்பில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. நம் ஒவ்வொருவருக்குள்ளும், கிருஷ்ணனும் இருக்கிறான், அர்ஜுனனும் இருக்கிறான், சகுனியும் இருக்கிறான். இந்த மூன்று குணங்களுமே, நமது மனதின் வெளிப்பாடு. நமது மனம் இப்படித்தான் செய்யப்பட்டது, இப்படித்தான் இயங்குகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com





# நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள்

இளைஞர்களே! பெருஞ்செயல்களை செய்து முடிப்பதில் எப்போதும் முன்னேறிச் செல் லுங்கள். ஏழைகளிடமும், சமுதாயத்தில் ஒடுக்கப் பட்டவர்களிடமும் இரக்கம் காட்டுங்கள். நமக்கு மரணமே வாய்த்தாலும்கூட அவர்களுக்கு இரக்கம் காட்டுவது நமது லட்சியம் ஆகும்.

என்னுடைய லட்சியத்தை உண்மையில் சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத்தன்மையை எடுத்துச்சொல்வதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

எழுந்திருங்கள். விழித்திருங்கள். நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன்னால், மனிதப்பிறவியினால் பெறுவதற்கரிய பெரிய நன்மையை அடையுங்கள். லட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.



உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், லட்சியம் ஒன்றுமில்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாக சொல்வேன்.

மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்தாக வேண்டும்

www.aanmeegamalar.com

# ௯ நாள் 9 வடிவம்

நவராத்திரியின் 9 தினங்களும், கடைசி தினமான வெற்றியை குறிக்கும் 10ம் நாள் வரை 10 தினங்களுக்கு 10 வடிவங்களின் அம்பாளை வணங்கவேண்டும். மேற்கண்ட 10 தினங்களும், 10 வடிவங்களும், அந்த வடிவங்களில் வழிபட்டால் நீங்கும் பிரச்சனைகளைப்பற்றியும் பார்ப்போம்.

**9 நாள்களும் வழிபடவேண்டிய வடிவங்களும், பலன்களும்**

| நாள் | பெயர் | பயன் |
|---|---|---|
| 1 | குமாரி | தொல்லை நீங்கும் |
| 2 | திருமூர்த்தி | தனதான்ய வளம் |
| 3 | கல்யாணி | பகை ஒழித்தல் |
| 4 | ரோகிணி | கல்வி வளர்ச்சி |
| 5 | காளிகா | துன்பம் நீங்குதல் |
| 6 | சண்டிகா | செல்வ வளர்ச்சி |
| 7 | ஸாம்பவி | நலம் விரும்பி |
| 8 | துர்க்கா | பயம் நீக்குதல் |
| 9 | ஸீபத்ரா | உண்டாகுதல் |

நவராத்திரி பண்டிகையின் முதல் நாள் மது கடைபர் அழிவுக்கு காரணமான தேவியை குமாரி வடிவமாக வழிபட வேண்டும்.

இரண்டாம் நாள் மகிஷாசுரனின் சேனைகளை வதம் செய்ய புறப்பட்ட ராஜராஜேஸ்வரியாக துர்க்கையின் வடிவத்தை அலங்கரித்துப் பூஜிக்க வேண்டும்.

மூன்றாம் நாள் மகிஷாசுரனை வதைத்த அம்பிகையை சூலத்துடன் மகிஷன் தலை மீது நிற்கும் கோலத்தில் வழிபட வேண்டும்.

நான்காம் நாள் அம்பிகையின் வெற்றித் திருக்கோலமாக வழிபட வேண்டும்.

ஐந்தாம் நாள் அம்பிகை சும்பன் என்ற அசுரனின் தூதன் வந்து பேசுவதை கேட்கும் கோலத்தில் பூஜிக்க வேண்டும்.

ஆறாம் நாள் அன்று சர்ப்ப ராஜா ஆசனத்தில் ஸ்ரீ சண்டிகா தேவி அமர்ந்திருக்கும் கோலம் பூஜைக்குரியதாகும்.



ஏழாம் நாளில் சண்ட முண்டர்களை வதைத்த பின் பொன் பீடத்தில் அம்பிகை அமர்ந்து வீணை வாசிக்கும் கோலத்தில் பூஜைகள் செய்யப்பட வேண்டும்.

எட்டாம் நாளில் ரக்த பீஜன் வதமான பின் கருணை நிறைந்த தோற்றத்துடன் உள்ள அம்பிகையை பூஜிக்க வேண்டும்.

ஒன்பதாம் நாளில் வில், அம்பு, அங்குசம், சூலம் முதலியவைகளை தரித்த கோலத்தில் அம்பிகையை பூஜிக்க வேண்டும்.

பத்தாம் நாளன்று அம்பிகை லிங்கத்தைப் பூஜித்து சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக விளங்குகிறாள்.

எனவே அந்த கோலத்தில் அம்பிகையை வழிபடுதல் வேண்டும். நவராத்திரியில் கன்னிகை பூஜை, சுவாஸினி பூஜை, மிகவும் முக்கியம். ஒவ்வொரு நாளும் 2 வயதுப் பெண் குழந்தை முதல் முறையே பத்து வயது பெண் வரை ஒவ்வொன்றாகவோ அல்லது முதல் நாள் ஒன்று இரண்டாம் நாள் இரண்டு என்ற முறையாகவோ குமாரி பூஜை செய்ய வேண்டும்.



ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# தீய பலனைத் தரும் எள்தீபம்



## காஞ்சி மகாப் பெரியவர்



சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது நாளுக்கு நாள் பெரு கிக் கொண்டே வருகிறது.

துன்பங்களால் அவதிப்படும்போது, அதற்கு விடிவு என்று கூறப்படும் பல்வேறு பரிகாரங்களை நாம் கண்மூடிக் கொண்டு செய்கிறோம் என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அதன்படி எந்த கோவில்களிலும் எள் தீபம் ஏற்றாதீர்கள். இதுவும் தவறாகச் செய்யப்படும் ஒரு வழிபாடு. இது தோஷத்தைப் போக்குவதற்குப் பதிலாக அதிகப்படுத்தும்.

எள் என்பது அரிசியைப் போல ஒரு தானியம். அரிசியை எரிப்போமா? எள்ளை எண்ணை யாக்கி அந்த எண்ணையைக் கொண்டு தீபமேற்றச் சொல்லித்தான் நமது பரிகாரமுறைகள் சொல்கிறதே தவிர எள்ளையே நேரிடையாக எரிக்க அல்ல. எள்ளை நைவேத்தியமாகத்தான் படைக்க வேண்டும்.

காஞ்சி மகான் ஸ்ரீமகாபெரியவர் ஒருமுறை தனது சொற்பொழிவில் எள்தீபம் கூடாது என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனாலும் நாம் அதை பொருட்படுத் தாமல் எள் தீபத்தை ஏற்றிவருகிறோம். இதற்கு எந்தவித பலன்களும் கிடை யாது. எள்ளில் இருந்து பெறப்படும் எண் ணையில்தான் தீபத்தை ஏற்ற வேண்டும்.

வேத சாஸ்திரங்களிலும், புராணக் கதைகளிலும், முன்னோர்களாலும் சொல் லப்படாத ஒரு செயலை தவறாக செய்து துணியில் எள்ளைச் சுற்றி எரிப்பதால் கோவில் அசுத்தம் அடைவதற்கு நாம் காரணமாக உள்ளோம்.

திருக்கோயில் சாஸ்திரப்படி கோயிலை அசுத்தம் செய்தாலும் பாவம் பீடிக்கும் என்று கூறப்படுகிறது. கோவிலை சுத்தம் செய்து உழவாரப் பணிகள் செய்யும் அடியார்களுக்கு பல்வேறு புண்ணியங்கள் கிடைப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

கோவிலை சுத்தம் செய்யாவிட்டாலும், அசுத்தம் செய்யாமலாவது இருப்போம், இனியாவது சனிபகவானுக்கு நல்லெண் ணை தீபத்தை மட்டுமே ஏற்றுவோம்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.